Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 15 ஞாயிற்றுக்கிழமை (31.08.2014) பக்கங்கள் 20 ஓசை – 334

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## குளத்தில் குளித்த 3 சிறுமிகள் சகதியில் சிக்கி உயிரிழப்பு

### கிளிநொச்சி செல்வாநகரில் துயரம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி செல்வாநகர்ப் பகுதியிலுள்ள கந்தன்குளத்தில் குளிக்கச்சென்ற இரண்டு சகோதரிகள் உட்பட மூவர் குளத்தில் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

நேற்று நண்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த சரவணபவன் தாட்சாயினி (வயது-8)அவரது சகோதரியான சரவணபவன் நவதா

19 ஆம் பக்கம் பார்க்க

### பளை பிரதேசசபை அசமந்தம்

## குடிநீரின்றித்தவிக்கும் பளை பிரதேச மக்கள்

(பளை)

பளை பிரதேச சபையின் அசிரத்தையான செயற்பாட்டினால் பளை பிரதேசத்திலுள்ள பெருமளவான கிராமங்களிலுள்ள மக்கள் கடந்த மூன்று நாட்களுக்கும் மேலாக குடிநீரின்றி அல்லற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பளைப் பிரதேசத்திலுள்ள இத்தாவில், முகமாலை, வேம்பொடு கேணி ஆகிய கிராமங்கள் தற்போதைய வறட்சி காரணமாக கடுமையான நீர்த்தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளன. இந்த நிலையில் இத்தாவில் பகுதியில் 5 நீர்நிரப்பும் தாங்கிகள் வைக்கப்பட்டு நாளொன்றுக்கு 5000லீற்றரும் வேம்பொடுகேணியில் 2 தாங்கிகள் வைக்கப்பட்டு 2000 லீற்றரும், முகமாலையில் 3 தாங்கிகள் வைக்கப்பட்டு 3000 லீற்றரும் வழங்கப்பட்டுவந்தது.

எனினும் அனர்த்த முகாமைத்துவப்பிரிவு குடிநீர் விநியோகத்திற்குரிய நிதியை தரவில்லையெனத் தெரிவித்து கடந்த மூன்று நாட்கள்ாக பிரதேச சபை நீர்

19 ஆம் பக்கம் பார்க்க

# காணாமற்போனோரை கண்டுபிடிக்க வலுவான பொறிமுறை அவசியம்

### வலியுறுத்தும் சர்வதேச மன்னிப்புச்சபை

இலங்கையில் காணாமற் போன ஆயிரக்கணக்கானவர்களைக் கண்டுபிடிப்பதற்கான வலுவான பொறிமுறை ஒன்று உடனடியாகத் தேவையென வலியுறுத்தியுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய இயக்குநர் ரிச்சர்ட் பெனாட், அதேபோன்று பலவந்தமாகக் காணாமற் போகச செய்யப்பட்டோருக்கு நீதியும் உண்மையும் மிகவும் அவசியம் என்றும் தெரிவித்துள்ள்ார்.

ஐ.நா.வின் ஐ.ஆர்.ஐ.என் செய்திச் சேவைக்கு இந்தத் தகவலை அவர் தெரிவித்திருக்கிறார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கை அரசாங்கம் பல வருடங்களாக பொறுப்புக் கூறல் விடயத்தில் தாமதப்படுத்தும் தந்திரோபாயங்களைப் பின்பற்றி வருகிறது. அளித்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதற்கும் தவறியுள்ளது. இவற்றைக் கருத்தில் எடுக்கும்போது, இலங்கை அரசாங்கம் தண்டனையிலிருந்து தான் தப்பிக் கொள்ள நினைக்கும் அதே வேளை பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் பின் நிற்கிறது என்பது புலனாகிறது. யுத்தம் முடிவடைந்து 5 வருடங்கள் கழிந்து விட்டன. ஆனாலும் அங்கு இரண்டு தரப்புக்களாலும் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. ஆயுத மோதல் காரணமாகப் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு உண்மை

19 ஆம் பக்கம் பார்க்க

## பௌத்தமத கடும் போக்கு ஐ.நா.செயலர் கவலை

(கொழும்பு)

இலங்கையில் அதிகரித்து வரும் பௌத்த கடும் போக்குவாத நடவடிக்கைகள், அதனால் அங்குள்ள சிறுபான்மை மதங்கள் மீதான ஒடுக்கு முறைகள் என்பன கவலையளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக ஐ.நா.பொதுச் செயலர் பான்.கீ.மூன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கை மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளில் பௌத்த

19 ஆம் பக்கம் பார்க்க

## 13இற்கு அப்பாலான தீர்வு நிராகரித்தது அரசாங்கம்

### என்கிறது திவயின

(கொழும்பு)

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு அப்பாலான அதிகாரப்பரவலாக்கம் எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாதென அரசாங்கம், இந்தியாவிற்கு தெரியப்படுத்தியுள்ளதாக திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று அதிகார பரவலாக்

19 ஆம் ப்க்கம் பார்க்க

## "ஷில்போதயம் 2014" 3ஆம் நாளில் ஜனாதிபதி மகிந்த பங்கேற்பு



"ஷில்போதயம் 2014" தேசிய கைப்பணி கண்காட்சியின் மூன்றாம் நாளான நேற்றைய நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பிரதம விருநதினராகக் கலந்து சிறப்பித்தார்..

கொழும்பில் அமைநதுள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க கண்காட்சி கூடத்தில "ஷில்

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் ஊர்வலம் பொலிஸாரால் தடுத்து நிறுத்தம்

### மகஜர் கையளிப்பு மாவையிடம்

சர்வதேச காணாமற் போதலுக்கு எதிரான தினமான நேற்று வவுனியாவில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்ட பிரஜைகள் குழு மற்றும் காணாமற் போனோரின் உறவுகளின இணையம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஊர்வலத்திற்கு பொலிஸார் தடை விதித்தமையால் மகஜர் கையளிக்கும் நிகழ்வு இடம்பெறவில்லை.



வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றுக் காலை காணாமற் போதலுக்கு எதிரான சர்வதேச நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதன் போது அரசியல் பிரமுகர்களின் உரை

19 ஆம் பக்கம் பார்க்க

## முடிவிற்கு வந்தது பணிப்புறக்கணிப்பு

மருத்துவ தொழில் நுட்பவியலாளர்க்ள் மேற்கொண்டு வந்த பணிப்புறக் கணிப்புபோராட்டம் இன்றுடன் தற்காலிகமாக நிறுத்தப்படவுள்ளது.

இன்று காலை 8 மணியுடன் தமது போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்திக்கொள்வதாக மருத்துவ தொழில்நுட்ப பணி

19 ஆம் பக்கம் பார்க்க



வருகின்ற வருமானம் போதாதா?

20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சிமெந்து, சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங பழுதுபார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாபபான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (விசேட'மாக A/L பரீட்சை எழுதியவர்கள் இணைந்துகொள்ளலாம். (0775964299) (C/3775)

## பிரதேச சபைக்கு செயலாளர் இல்லை; வேலைத்திட்டங்கள் ஸ்தம்பிதம்

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு செயலாளர் இதுவரை நியமிக்கப்படாமையால் சபையினூடாக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் கடமையாற்றியவர் ஓய்வு பெற்ற நிலையில் இதுவரை செயலாளர் நியமிக்கப்படாமையால் பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்கள் மற்றும் குடிநீர் விநியோகம் என்பவற்றுக்கு அலுவலக ரீதியாக அனுமதியைப் பெறமுடியாதுள்ளதாக பிரதேச சபையினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக வறட்சியான கால நிலையினால் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பல கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது அதற்கான நிதி ஒப்புதல் அனுமதி பெறமுடியாதுள்ளதாக பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குடிநீர் விநியோகம் இடம்பெறாமையால் 5 கிராமங்களைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் குடிநீரைப் பெறுவதற்கு தற்போது மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. அத்துடன் கடந்த தினங்களாக இப்பிரதசங்களில் கழிவகற்றல் செயற்பாடுகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

எனவே வேலைத்திட்டங்களை சபை முன்னெடுப்பதற்கு ஏதுவாக விரைவில் நிரந்தர செயலாளரை நியமிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேசசபையினர் கேட்டுள்ளனர். (37)

## காணியற்ற 88 குடும்பங்களுக்கு வட்டக்கச்சியில் காணிகள் விநியோகம்

வட்டக்கச்சி,சிவிச்சென்ரர், மாயவனூர்,பன்னங்கண்டி போன்ற பிரதேசங்களில் இதுவரை காலமும் சொந்தக் காணியின்றி வாழ்ந்து வநத .88 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சொந்தமாக அரை ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

1954 ஆம் ஆண்டு வட்டக்கச்சியில் காணிகள் வழங்கப்பட்டு குடியேற்றம் செய்யப்பட்டதனை தொடர்ந்து இதுவரை காலமும் அதாவது 60 ஆண்டுகள் வரை காணியற்ற மக்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை. இந்த மக்கள் இதுவரை காலமும் ஏனையவர்களின் காணிகளிலும், வேறு பொதுக் காணிகளிலும் வாழ்ந்து வந்தனர். இதனால் இவர்கள் சொந்தக் காணிகள் அற்றவர்கள் என்ற அடிப்படையில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கப்பெறாமல் பாதிப்புகளுக்குள்ளாகியதோடு முக்கியமாக வீட்டுத்திட்ட பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டும் காணியின்மையால் வீட்டுத்திட்டத்தை பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.

இந்த விடயம் கடந்த வருடம் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரின் பெரு முயற்சியினால் மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த காணி-யற்ற 88 குடும்பங்களுக்கு காணிக்ள் வழங்கப்பட்டுள்ளன.

வட்டக்கச்சி பகுதியில் குறித்த பகுதி இனம் காணப்பட்டு துப்புரவு செய்யாத நிலையில் வனவள திணைக்கள அதிகாரிகளால் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. பின்னர் இந்த விடயம் சுற்றுச் சூழல் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த கவனத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரினால் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அமைச்சரின் ஒப்புதலும் பெறப்பட்டது. இருந்தும் வனவளத்திணைக்கள உயரதிகாரிகள் வனவளத்தை அழிக்க முடியாது எனச் சட்டத்தை காட்டி பத்து ஏக்கர் பரப்பளவு காணிக்கே அனுமதி வழங்க முடியும் என்று தெரிவித்தநிலையில் கடந்த ஒரு வருடமாக மீண்டும் தொடர்ச்சியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு 65 ஏக்கர் பரப்பளவுக் காணியும் பெறப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் காணிகள் நில அளவை செய்யப்பட்டு அரை ஏக்கர் வீதம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வட்டக்கச்சி கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் பவானந்தன் ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதிகேதீஸ்வரன்,கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன்,பளை பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன்,கரைச்சி பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் சிவகுமார்,கிராம அலுவலர்களான சத்தியநாதன்,ஜோன் ஜெகநாதன்,மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவி சுபத்[illegible] பொருளாதார அபிவிருத்தி உ[illegible]யோகத்தர்கள்,சமுர்த்தி உ[illegible]யோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## கோப்பாயில் திடீர் பரிசோதனை; 15 உணவகங்கள் வசமாக மாட்டின

கோப்பய் பிரதேசத்துக்குட்பட்ட பல பகுதிகளில் கோப்பாய் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்ளினால் உணவு கையாளும் நிலையங்கள் மீது நடாத்தப்பட்ட திடீர் சோதனையில் பதினைந்து நிலையங்கள் அகப்பட்டுக் கொண்டுள்ளன.

அதிகாலை 5 மணி முதல் மாலைவரையாக நடைபெற்ற இச் சோதனையின் போது காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தமை நாய், பூனை போன்ற விலங்குகள் உணவகங்களுக்குள் நடமாடியமை, பழைய உணவுகள் குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தமை மற்றும் சுகாதாரக் குறைபாடுகளுடன் காணப்பட்டமை எனப், பல குற்றச்சாட்டுக்கள் இவ்வுணவு கையாளும் நிலையங்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.இந் நிலையங்கள் மீதான வழக்குகள் யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலின் பேரில் மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் மற்றும் அப்பணிமனையைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள் இச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். நாற்பது உணவு கையாளும் நிலையங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டிருந்தன. பதினைந்து நிலையங்கள் மீது முப்பது வழக்குகள் தொடுககப்பட்டுள்ளன.

கோப்பாய் பிரதேசத்தில் உள்ள அச்சுவேலி, புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி, உரும்பிராய், கோப்பாய் போன்ற பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையங்கள் மீதே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாட்களில் இப்பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள், வெதுப்பகங்கள் போன்றவற்றில் சுகாதாரப் பரிசோத்கர்களின் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன எனத் தெரியவருகிறது. (137)


### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3727)


## அலங்கார உற்சவம்

சாவகச்சேரி மட்டுவில் சந்திரபுரம் அருள்மிகு செல்லப் பிள்ளையார் திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி பத்து தினங்கள். இடம்பெறவுள்ளது.

தினமும் காலை 10 மணிக்கு அபிஷேக ஆராதனையும் 12 மணிக்கு வசந்தமண்டப விசேட பூசையும் நடைபெற்று சுவாமி திருவீதியுலா நடைபெறுவதுடன் மாலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை இரவு உற்சவம் இடம்பெறவுள்ளது. ஆலய பிரதம குரு கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இவ்வலங்கார உற்சவம் இடம்பெறவுள்ளது. (இ)

## தலைமைத்துவ பயிற்சிக்கான மாணவர்களுக்கு பேருந்துச் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புதிய மாணவர்களுக்கு மின்னேரியாவில் நடைபெறும் தலைமைத்துவப் பயிற்சிக்கு செல்வதற்காக அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விசேட பேருந்துச் சேவை வரும் சனிக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் மாணவர்களின வருகைக்கு ஏற்ப யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்து மின்னேரியா வரை இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே யாழ்ப்பணத்தில் இருந்து மின்னேரிய செல்லும் மாணவர்கள் யாழ்.மத்திய பேருந்து நிலைய அலுவலகத்தில் ஆசன முற்பதிவுகளைச் செய்து கொள்ளலாம் என யாழ். சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார்.


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

### நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 286
திகதி - 2014.08.29
வர்ணம் - நீலம்

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

02 19 26 27 K

பரிசுத் தொகை ரூபா. 12,130,180/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 09 | 450,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 207 | 207,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 390 | 390,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9498 | 569,880/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4961 | 198,440/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 123735 | 2,474,700/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17877 | 357,540/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 12,130,180/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,647,560/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 12,371,640/-

2014.09.02ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk

(C/3760)


## கீரிமலை கடலிலும் கரைந்தார் விநாயகர்



கோண்டாவில் கிழக்கு சபரிமலை ஐயப்பன் ஆலயத்தில் இருந்து நேற்று முற்பகல் 10 மணியள்வில் விநாயகர் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கீரிமலைக் கடலில் கரைக்கப்பட்டது விநாயகர் ஊர்வலம் பலாலி வீதி வழியாக உரும்பிராய் சந்தியை அடைந்து உரும்பிராய், மருதனார்மடம் வீதி வழியாக மருதனார்மடம் சென்று அங்கிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக மாவிட்டபுரம் சென்றடைந்தது. பிற்பகல் 1.30 மணியளவில் கீரிமையில் அடியவர்களின் அரோகரா கோசத்தின் மத்தியில் கடலினுள் விநாயகர் சிலை எடுத்துச் செல்லப்பட்டு கடல் நீருடன் கரைக்கப்பட்டது

யாழ்ப்பாணத்தில், முதல் தடவையாக ஆவணி சதுர்த்தியை முன்னிட்டு விநாயகர் சிலை கடலில் கரைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒற்றுமையை வளர்ப்பதன் மூலம் விரைவான அபிவிருத்தியை பெறமுடியும்

## யாழ்.மாநகர சபையின் பிரதி மேயர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசியல் கட்சிகள் தமக்குள் ஒரு ஒற்றுமையினை வளர்த்துக் கொள்வதன் மூலம், உரிமையினையும் அபிவிருத்தியினையும் பெற்றுக் கொள்ள முடியுமென யாழ்.மாநகர சபையின் பிரதி முதல்வர் எஸ். ரமீஸ் தெரிவித்தார்.

யாழ்மாநகர சபையின் 8 ஆவதும், இறுதியுமான மாதாந்த கூட்டம் கடந்த வியாழக்கிழமை மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

அதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், அரசின் மத்தியில் இணக்க அரசியல் நடாத்துவதன் மூலம், அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறான ஒரு சூழ்நிலையில் தான், இந்த சமூகத்தின் எதிர்காலம் பற்றி புரிந்துகொள்ள முடியும்.

முஸ்லிம் அரசியல் சீரான சாமர்த்தியமான அரசியலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 30 வருட யுத்தத்தில் மிக மோசமான அழிவுகளின் பின்னர் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதுடன், சமாதானமும் கொண்டு வரப்பட்டு, யுத்தம் முடிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், மீண்டும் தென்பகுதியில் உள்ள பெரும்பான்மை மக்களின் மத்தியில் உள்ள அரசியல் பிரமுகர்களினாலும், தீவிரவாதசக்திகளினாலும், இனப் பிரச்சினையை விட்டு மதப்பிரச்சினையைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

முஸ்லிம்களை பொறுத்தமட்டில், எல்லா மக்களுடனும், சந்தோஷமாக சமாதானமாக வாழ வேண்டும் என்று விரும்புகின்றோம்.

தமிழ் மக்களுடன் எவ்வாறு சந்தோஷமாகவும், ஒற்றுமையாகவும் வாழ விரும்புகின்றோமே அதே போன்று தென்பகுதியில் உள்ள சிங்கள மக்களுடனும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ விரும்புகின்றோம் என்றார். (25)

# நவீன வசதிகொண்ட தீயணைப்பு இயந்திரம் யாழ்.மாநகரசபைக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாண மாநகரசபையின் வரலாற்றில் நவீன வசதிகளைக் கொண்ட முழுமையான தீயணைப்பு இயந்திரம் ஒன்று நேற்றுமுன்தினம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லவினால் யாழ்.மாநகர முதல்வர் திருமதி.யோகேஸ்வரி பற்குணராசாவிடம் கொழும்பில் வைத்து உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அமைச்சின் பிரதம பொறியியலாளர் என்.ரி.எம்.சிறாயுதீன், யாழ்.மாநகர சபையின் பிரதம பொறியியலாளர் கே.முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். 50 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட 4000 லீற்றர் கொள்ளளவு நீர்த்தாங்கியுடன் இந்த இயந்திரம் காணப்படுவதுடன் 10 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட தண்ணீர்பவுசர் வாகனம் ஒன்றும் இதனுடன் இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ரூபா 5 மில்லியன் நிதியும் தீயணைப்புப் பகுதி மீள் புனரமைப்பு வேலைகளுக்காக மாகாண உள்ளூராட்சி அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை மாநகரசபையில் தீயணைப்புப் பகுதியினரின் சேவைகளை மேலும் விஸ்தீரணப்படுத்துவதற்கு அனுகூலமாக அமையும் என தெரிவிக்கப்படுகின்றது. மேலும் 8 மில்லியன் பெறுமதி கொண்ட பிக்கப் வாகனம் ஏற்கனவே யாழ்.மாநகரசபைக்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழக பிரதானவீதியில் போக்குவரத்து நெருக்கடி

(சுன்னாகம்)

பரமேஸ்வராச் சந்தியில் இருந்து இராமநாதன் வீதியில் பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் வளைவான பகுதியில் தினமும் போக்குவரத்து நெருக்கடி நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தினமும் அதிகளவான மாணவர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள், பொதுமக்கள் என பலரும் பயணிக்கும் இவ் வீதியில் இரு பக்கமும் உள்ள கடைகளுக்கு முன்னால் நிறுத்தப்படும் வாகனங்கள், மற்றும் துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றினால் வீதியால் செல்லும் வாகனங்கள் விபத்துக்களை சந்திப்பதாகவும், நடந்து செல்வோர் நடுவீதியிலேயே செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே வீதியில் போக்குவரத்து அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்துவதன் மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் போக்குவரத்தை சீரான முறையில் மேற்கொள்ளமுடியுமென தெவிக்கப்படுகின்றது. (66)



சுவிஸ் நாட்டின் மக்களுக்கான வளர்ச்சி நிறுவனத்தினால் கண்டாவளை பிரதேசத்தில் உள்ள கோரக்கன்கட்டு கிராம அலுவலர் பிரிவில் 100 இற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகளுக்கான ஆரம்ப நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கோரக்கன்கட்டு பகுதியில் இடம்பெற்றது இந் நிகழ்வில் மேற்படி நிறுவனத்தின் செயற்றிட்ட முகாமையாளர் ரோரோ (Reto) பயனாளி ஒருவருக்கு வீட்டின் இலக்கம் ஒன்றினை வழங்குவதையும் அருகில் கோரக்கன்கட்டு 1 கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் க.தேவேந்திரன் மற்றும் நிறுவன அதிகாரிகளையும் காணலாம். (70)

# தமிழர்கள் நம்பிக்கொண்டேயிருக்கட்டும்... தலைவர்களின் நாடகமும் தடங்கலின்றி நடக்கட்டும்...






வடக்கு மாகாண அபிவிருத்திக்கு அரசாங்கம் முட்டுக்கட்டை எண்டு முதலமைச்சர் "எங்கள் தங்கம் சிவசிவா" விக்கினேஸ்வரன் சொல்லியிருக்கிறார்.

கொழும்பிலிருந்து ஹெலிகொப்டர்கள் மூலம் வந்திறங்குகிறவை தங்கட சுய லாபத்துக்காகவும், சுய தம்பட்டத்துக்காகவும் செய்யிற அரசியல் சூத்துகள் தமிழ் மக்களுக்கு பயன்படாது எண்டும் விக்கியர் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

இப்பிடி விக்கியர் சொன்னது போனகிழமை யாழ்ப்பாணத்துக்கு வந்த பஷில் ராஜபக்ஷவை மனசில வைச்சுத்தான்.

பஷில் வந்தபோது, வரவேற்று சேர்ந்து நிண்டு, நாடா வெட்டி, படம் எடுத்து, ஒண்டாக தேத்தண்ணீ குடிச்சு, சாப்பிட்டு, சிரிச்சுப்பறைஞ்சு செய்யிறதெல்லாம் செய்து, கேட்க வேண்டியதெல்லாம் கேட்டுப்போட்டு இப்ப திடீர் எண்டு அண்ணை ஒரு குத்துக்கரணம் அடிச்சிருக்கிறார்.

போனகிழமை பேப்பர்களை பாத்தவைக்குத் தெரியும் பஷிலும், விக்கியரும் என்ன மாதிரி நெருக்கமாக, கலகலப்பாக ஒண்டா நிண்டவை எண்டு.

அப்பிடி ஒண்டாக நிக்கும்போது வடக்கு மாகாண அபிவிருத்தியைப் பற்றியும், மாகாண சபைக்கு அரசாங்கம் போடுகிற முட்டுக்கட்டையைப் பற்றியும் கொஞ்சம் கதைச்சிருக்கலாமல்லோ.

ஆனால், அப்ப வாயை மூடிக்கொண்டு இருந்திட்டு இப்ப அண்ணை முழங்கித்தள்ளுகிறார்.

இப்பிடித்தான் இவயின்ர வாழக்கை.

ஜனாதிபதியையோ, பஷிலையோ அல்லது வேற அமைச்சர் மாரையோ கண்டால் குழைஞ்சு குழைஞ்சு கதைப்பினம்.

மெல்லமாக காதுக்குள்ள தங்கட தனிப்பட்ட தேவைகளைப் பற்றி குசுகுசுத்து காரியங்களையும் வலு கெட்டித்தனமாக பாத்துக்கொள்ளுவினம்.

ஆனால், சனங்களோட சம்பந்தப்பட்ட அபிவிருத்தி அல்லது அரசியல் பிரச்சினைகள் எண்டால் அதைப் பற்றி வாயே திறக்க மாட்டினம்.

நல்லாயிருக்கடா ராமா! இந்த ட்றாமா.

இப்பிடியே, தமிழ்ச் சனங்களை ஏமாத்தி ஏமாத்தி, அதுகளுக்கு பொய்யைச் சொல்லிச் சொல்லி முட்டாள் சமூகமாக தமிழர்களை மாத்தி வைச்சிருக்கினம்.

இவை மற்ற தமிழ் அரசியல்வாதிகளைப் போல இப்ப விக்கி அண்ணையும் செய்யிறதுதான் கவலையான விசயம்.

நெத்தியில திருநீறு, குங்குமப்பொட்டு. பாதிச்சாமியார் கோலம். பட்டு வேட்டி சால்வை. காலையிலும், மாலையிலும் பஜனை.

இப்பிடி ஒரு அலங்காரத்தை செய்துகொண்டு நீதியரசராகவும், பெரிய மனிசனாகவும் இருக்கிற விக்கியர் சின்னத்தனமாக நடக்கக்கூடாது. பொய்புரட்டு பேசக்கூடாது.

விக்கியர் இப்ப சாதாரண ஆளில்ல.

தமிழ் மக்களின்ர சார்பான ஒரு முதலமைச்சர்.

இவரே இப்பிடி தில்லுமுல்லுகளும், குத்துக்கரணங்களும் அடிச்சால் அது எல்லாருக்கும்தான் மானக்கேடு.

நாக்குக் கூசாமல் பொய்யை சொல்லுவதற்கு எப்படி ஒரு துணிச்சல் வேணும்?

என்ன பொய்யைச் சொன்னாலும் தமிழ்ச் சனங்களை அதைப்பற்றி எந்தக் கேள்வியும் கேட்கமாட்டார்கள் எண்ட துணிச்சல்தான் இதுக்கெல்லாம் காரணம்.

தமிழ் அரசியல் எண்டால் இப்பிடித்தான். சுத்துமாத்தும், ஏமாத்தும், புலுடாவும், பொறுப்பின்மையும் ஒண்டுமே செய்யாமல் வாயடிப்பதும் எண்ட பண்பாட்டில் விக்கியரும் சேர்ந்துவிட்டார்.

வாழ்க விக்கியர். வளர்க உம் தமிழ்த் தேசியத் தொண்டு. ஓங்குக உங்கள் பொய்யும் புரட்டும். உயர்க உம் சொந்த நலன்.

தமிழர்கள் நம்பிக்கொண்டேயிருக்கட்டும், எங்கட தலைவர்கள் தங்கத் தாம்பாளத்தில தமிழீழத்தை வைச்சு வெல்லக்கட்டியோட தரப்போகினம் எண்டு.

நாம் துன்பப்படுவது நம் செயல்களின் காரணமாகத்தான். அதற்குக் கடவுள் பொறுப்பல்ல.
- விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மகிழ்ச்சி தானே வரும்!

நாளுக்குநாள் புதிது புதிதாக அறிமுகமாகும் பொருட்களையும் வசதிகள்ளயும் தேடி ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய நம் வாழ்வு, இயற்கையிடமிருந்தும் சக மனிதரிடமிருந்தும் நம்மை அந்நியப்படுத்தி வருவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தொலைக்காட்சிகளிலும் கணனி வலைத்தளங்களிலும் ஓயாது நம்மை நச்சரிக்கும் விளம்பரங்கள், அந்தப் பொருட்களை மேலும் மேலும் வாங்க வேண்டும் என்ற நுகர்வு மனநிலையை அல்லது வெறியை இளைஞர்களிடமும் குழந்தைகளிடமும் ஏற்படுத்தி விடுகின்றன.

இன்று ஏதேனும் ஒரு திரைக்கு முன்னால் பலமணி நேரம் இளைஞர்களும் குழந்தைகளும் அமர்ந்திருக்கிறார்கள். இவ்வாறு நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் மன அமைதி கெடும்; மகிழ்ச்சி இராது என நரம்பியல் விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள்.

அதிக நேரம் தொலைக்காட்சி, கணனி முன் இருப்பது சமூக நலனுக்கும் உகந்ததல்ல. தனி நபர் நலனுக்கும் நல்லதல்ல. இவற்றால் ஒரே குடும்பத்திலேயே ஒருவருக்கொருவர் அந்நியப்பட்டு விடுகின்றனர். குடும்பத்துக்குள் கூடிப்பேசுதல் என்பது பெருமளவு குறைந்துள்ளது.

குழந்தைகளும், இளைஞர்களும் தங்களைச் சுற்றி நடக்கிற விஷயங்களைக்கூட காணாது தொலைக்காட்சி அல்லது கணனித் திரைகளினுள் மூழ்கிக் கிடக்கிறார்கள்.

இன்றைய இளைஞர்களுக்கு நாட்டின் பொதுநலம் சார்ந்த பிரச்சினைகள் பற்றிய அறிவு மிகவும் குறைவாகவே உள்ளது அல்லது இல்லை என்றே சொல்லலாம். சமூக நலனில் அக்கறையின்மையும், பொதுச்சேவை செய்வது பெருமளவு குறைந்துள்ளதும் தெரியவந்துள்ளது.

நாம் இந்த நுகர்வு கலாசாரத்திலிருந்து விடுபடவேண்டும். ஓய்வு நேரத்தை நல்வழிகளில் உபயோகப்படுத்தக் கற்றுக் கொடுக்க வேண்டும். சிறந்த கல்வி, இயற்கையோடு இயைந்த தன்மை, அடுத்தவர்களோடு ஒருங்கிணைத்து செயல்படுதல் என சிறு வயதிலிருந்தே பாடசாலைகளும் பெற்றோரும் இயங்கவேண்டும்.

புதிய கண்டுபிடிப்புகளிலும் நுகர்வுப் பொருட்களிலும் மகிழ்ச்சி இருப்பதாகக் கருதி அவற்றைத் தேடி ஓடுவதை வாழ்க்கையாக்கிக் கொள்ளாமல், இயற்கையையும் சமூகத்தையும் அடுத்த மனிதர்களையும் நேசிப்பதில் அக்கறை செலுத்துவதில் வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சி இருப்பதைக் கண்டுகொள்ள வேண்டும்.

ஒரு குட்டிக்கதை.

கவலையுற்ற மனிதன் ஒருவன் குருவைத் தேடி வந்தான்: "குருவே! என் வாழ்க்கையில் மகிழ்ச்சியே இல்லை. என்னென்னவோ செய்து பார்க்கிறேன். மகிழ்ச்சி மட்டும் கிடைக்கவில்லை" என்றான்.

குரு அவனை ஒரு தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு வண்ணத்துப்பூச்சிகள் அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன. "இதோ இவற்றில் ஒரு வண்ணத்துப்பூச்சியைப் பிடித்து வா!" - குரு அவனிடம் சொன்னார்.

அவன் வண்ணத்துப்பூச்சியைத் துரத்தித் துரத்தி ஓடினான். அவனால் எந்தப் வண்ணத்துப்பூச்சியையும் பிடிக்க முடியவில்லை.

"பரவாயில்லை. வா, நாம் இந்தத் தோட்டத்தின் அழகை ரசிக்கலாம்!" என்ற குரு அவனைத் தோட்டத்தின் நடுவில் அழைத்து வந்தார். இருவரும் அங்கு அமைதியாக நின்று, தோட்டத்தின் அழகைக் கண்குளிர பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிறிது நேரத்தில் அவர்களைச் சுற்றியும் வண்ணத்துப்பூச்சிகள் பறக்கத் தொடங்கின. அவன் பிடிக்கத் துரத்திய வண்ணத்துப்பூச்சி அவன் கைகளிலேயே வந்து அமர்ந்தது.

குரு சிரித்தபடி அவனிடம் சொன்னார்: "இதுதான் வாழ்க்கை! மகிழ்ச்சியைத் தேடி துரத்துவது அல்ல வாழ்க்கை. நாம் வாழ்க்கையை அமைதியாய் ரசிக்கும்போது மகிழ்ச்சி நம்மிடம் தானே வந்து சேர்ந்துவிடும்!"

- ஆசிரியர்

# கல்லுண்டாய் வெளியில் திண்மக்கழிவு; நவாலி கிராமம் ஆபத்தின் விளிம்பில்

(யாழ்ப்பாணம்)

கல்லுண்டாய் வெளியில் எரியூட்டப்படும் திண்மக்கழிவுப் புகையினால் நவாலி வடக்கு, நவாலி தெற்கு பிரதேச மக்களுக்கு சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்பரவலாம் என சுகாதாரப் பகுதி எச்சரித்துள்ளது.

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசம் காக்கைதீவு கடற்கரை பிரதேசம் ஆகும்.

இங்கு வகைதொகையாக கட்டுப்பாடின்றி உள்ளூராட்சி சபைகளால் திண்மகழிவுகள் கொட்டப்படுகின்றன.

இவ்வாறு கொட்டப்படும் கழிவுகள், திண்மக்கழிவுகள், ஆஸ்பத்திரிக் கழிவுகள் எரியூட்டப்படுகின்றன.

இதனால் உருவாகும் நச்சு புகை, கடற்காற்றின் எதிர்த்திசையில் நவாலி வடக்கு, நவாலி தெற்கு மக்கள், சிறுவர், குழந்தைகள் வயோதிபர் எனப் பலரையும் சுவாசம் சம்பந்தமான நோய்க்குட்படுத்துகின்றது.

நவாலி கிழக்கு 'முருகானந்தா ச.ச.நிலைய உபதலைவர் மேற்படி விடயமாக யழ். அரச அதிபருக்கும், மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கும், யாழ். மாநகர மற்றும் மானிப்பாய் பிரதேச சபைகளின் உடனடி கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார். (92)

# முகாமைத்துவப் போட்டி; யாழ். செயலகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் ரீதியாக அலுவலக முகாமைத்துவப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இதற்கான அறிவுறுத்தல்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

செப்ரெம்பர் முதல்வாரத்தில் இந்தப்போட்டிக்கான அலுவலக தரிசிப்பு வேலைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர்களின் அலுவலகமும் பிரதேச செயலர் தலைமையிலான பரிசோதனைக்குழுவினரால் பரிசீலிக்கப்படவிருக்கிறது. இதன்அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்ட தரவரிசைப்பட்டியல் ஒன்று தயாரிக்கப்படவிருக்கிறது.

முதல் மூன்று இடங்களைப்பெறுபவர்களுக்கு விசேட பரிசில்கள் காத்திருக்கின்றன. மேலும் பலருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட விருக்கின்றன. (க)

# உள்ளூராட்சிசபை உறுப்பினர்களுக்கு கேரளாவில் விசேட பயிற்சி

(வடமராட்சி)

வடமாகாணத்தின் உள்ளூராட்சி மன்றத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் முதன்முதலாக கேரளாமாநிலத்தில் உள்ள 'கிலா' பயிற்சி நிலையத்திற்கு பயிற்சிக்காக செல்லவுள்ளனர்.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளன தேசிய இணைப்பாளர் இதற்கான அவசர நடவடிக்கையை எடுத்துள்ளார்.

முதற்கட்டமாக வடமாகாண 34 உள்ளூராட்சி சபைகளில் 25 உறுப்பினர்கள் மட்டும் பங்குபற்றுவதற்கான விசேட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 5 நாள் விசேட பயிற்சி கற்கைநெறி, சுற்றுலா மற்றும் பயிற்சியின்பின்னரான சர்வதேச பங்குபற்றல் சான்றிதழ் என்பன 'கிலா' நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ளது.

வடக்கில் பங்குபற்றவுள்ள உறுப்பினர்கள், தவிசாளர்கள் ஏற்கனவே தமது பெயர், விபரங்கள், பாஸ்போட் பிரதிகளை ஒப்படைத்துள்ளனர்.

இதுவரை விண்ணப்பம் செய்யாதவர்கள் எதிர்வரும் 05ஆம் திகதிக்கு முன்னர் நிதி விபரங்களுடன் சமுகமளிக்குமாறு சம்மேளன ஒருங்கிணைப்பாளர் கேட்டுள்ளார். (92)

# பிரச்சினைக்கு மூலகாரணம் ஜனாதிபதி முறைமையா?

## கேள்வி எழுப்புகிறார் பிரதமர்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறைமை தான் நாட்டில் தோன்றும் பாரிய பிரச்சினைகளுக்கு காரணம் என்று சொல்வது முட்டாள்தனம் என்றும் நாட்டில் காணப்படும் பிரச்சினைகளுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அன்றி, சமூகமே காரணம் என்றும் பிரதமர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.தற்போது நாட்டில் நிறைவேற்று அதிகாரத்தை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து உதவிகள் கிடைத்து வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

# விதைநெல்லுக்காக அலையும் விவசாயிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கைக்குத்தேவையான விதை நெல்லுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவருகிறது.

கடந்த வருடம் பருவமழை பொய்த்து விட்டதனால் யாழ். குடாவில் நெற்செய்கை விளைச்சல்கொடுக்கவில்லை இதனால் விவசாயிகள் வசம் விதைநெல் இல்லாமல்போய்விட்டது. இதனால் இந்த ஆண்டுக்கான விதைநெல்லுக்காக விவசாயிகள் அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றனர்.

விவசாயசேவை நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த விதைநெல் ஏற்கனவே விற்றுத்தீர்க்கப்பட்டபடியால் அனேகமான விவசாயிகளுக்கு விதைநெல் கிடைக்காமல் போய்விட்டது.

இப்பொழுது வெளிமாவட்டங்களில் இருந்து விதைநெல்லை எடுத்து வருவதற்கு பலதரப்பினரும் முயற்சி எடுத்துவருகின்றனர். என்று விவசாய சேவைகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

# பொருளாதாரம் ஏறு முகம் மத்திய வங்கி தகவல்

(கொழும்பு)

இந்த ஆண்டில் இலங்கை பொருளாதாரத்தில் 8 வீத வளர்ச்சி காணப்படுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

உலக பொருளாதாரம் வழமைக்குத் திரும்பியமை- தேசிய பொருளாதார வளர்ச்சி மற்றும் 2013ஆம் ஆண்டில் நோக்காக கொண்ட பொருளாதார நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியமை என்பன இதற்கு பிரதான காரணமாகும்.

இதுதவிர; மக்களின் வாழ்க்கை நிலை மாறுபட்டமை- உலகச் சந்தை பரவலாக்கப்பட்டமை- அதனை முன்னிட்டு தேசிய உற்பத்திகளின் வளர்ச்சி என்பவற்றுக்கமைய வளர்ச்சி ஏற்படுகிறது. நாட்டில் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக அதிகமாக முதலீடு செய்யப்படுகிறது.

வர்த்தகம்- போக்குவரத்து தொடர்பாடல் மற்றும் வங்கி ஆகியவற்றுக்குள்ள கேள்வியை மேம்படுத்துவதற்காக கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது.

உல்லாசப்பிரயாணத்துறை- மற்றும் அது தொடர்பான சேவைகளும் பொருளாதார வளர்ச்சிக்கு காரணமாக அமைகிறது.சாதகமான கால நிலை மற்றும் அரசின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு என்பவற்றினால் இவ்வாண்டு விவசாயத் துறையிலும் வளர்ச்சியேற்பட்டுள்ளது.

# கூட்டமைப்புத் தலைமையின் தாளந்தப்பிய ஆட்டம்

சங்கர சிவன்


**இனப்பிரச்சினைக்கான தீர்வு எது என்பதிலோ தீர்வை அடைவதற்கு எவ்வாறான அணுகுமுறை வேண்டும் என்பதிலோ கூட்டமைப்பிடம் தெளிவான நிலைப்பாடு இல்லை. தனிநாடு தான் தீர்வு எனக் கருதுபவர்கள் முதல் எந்தத் தீர்வும் இல்லாமல் இப்படியே போவோம் என்று நினைப்பவர்கள் வரை பல தரப்பட்டவர்களின் கூட்டுக் கதம்பமாகவே கூட்டமைப்பு இருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி எந்த முடிவுக்கும் வர இவர்களால் முடியாமலிருப்பதற்கு இதுவே காரணம்.**

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அரசியலில் ஈடுபட்டிருப்பவர்கள் இரண்டு விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தீர்வு எது என்பதும் அதை அடைவதற்கான அணுகுமுறை எது என்பதுமே அவை. இவ்விரு விடயங்களிலும் தெளிவான நிலைப்பாடு இல்லையென்றால் அது இலக்கு இல்லாத அரசியலாகவே இருக்கும். தமிழ் மக்களின் தலைவர்கள் தாங்களே என்று உரிமை கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இவ்விரு விடயங்களிலும் தெளிவான நிலைப்பாடு இல்லாதிருப்பதும் இவ்விடயங்களில் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள எதிரணிக் கட்சிகளைத் தமிழ் மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருப்பதும் அம்மக்களின் துரதிஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் தமிழ் மக்களின் விமோசனத்துக்கான அரசியலல்ல. வளமான வாழ்வுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி மக்களின் கண்ணைக் கட்டி அழிவுப் பாதையில் வழி நடாத்தும் அரசியல். இனப்பிரச்சினைக்கான தீர்வு எது என்பதிலோ தீர்வை அடைவதற்கு எவ்வாறான அணுகுமுறை வேண்டும் என்பதிலோ கூட்டமைப்பிடம் தெளிவான நிலைப்பாடு இல்லை. தனிநாடு தான் தீர்வு எனக் கருதுபவர்கள் முதல் எந்தத் தீர்வும் இல்லாமல் இப்படியே போவோம் என்று நினைப்பவர்கள் வரை பல தரப்பட்டவர்களின் கூட்டுக் கதம்பமாகவே கூட்டமைப்பு இருக்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி எந்த முடிவுக்கும் வர இவர்களால் முடியாமலிருப்பதற்கு இதுவே காரணம். இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி எதுவுமே பேசாமல் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்க முடியாதென்பதால் சர்வதேச சமூகம் என்ற மந்திரத்தை உச்சாடனம் செய்யத் தொடங்கினார்கள். சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் போர்க்குற்ற விசாரணை மூலம் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்றும் கூறி மக்களை ஏமாற்றுகின்றார்கள். தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிப்பதில் உடன்பாடு காண முடியாத இயலாமையை மூடி மறைப்பதற்கான வார்த்தை ஜாலம் தான் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்பது. தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு இப்போது மக்களிடமிருந்து ஆலோசனைகள் கோருவது இவர்களுடைய இயலாமையின் பகிரங்க வெளிப்பாடு.

சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறும் தலைவர்களால் எந்த நாடு எவ்விதமான தீர்வைப் பெற்றுத் தரும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் எந்தவொரு வெளிநாடும் (இந்தியாவைத் தவிர) அரசியல் தீர்வு முயற்சியில் ஈடுபடவில்லை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்பது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான கூட்டமைப்பின் கற்பனை. ஜெனீவா மாநாடும் போர்க்குற்ற விசாரணையும் இனப்பிரச்சினையின் தீர்வுடன் எவ்விதத்திலும் சம்பந்தப்படவில்லை. ஆனால் இவற்றின் மூலம் தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்ற பிழையான நம்பிக்கையைக் கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ் மக்களிடம் வளர்க்கின்றார்கள்.

**இந்தியா ஏதோ செய்யப்போகின்றது என்ற எதிர்பார்ப்பை மக்களிடம் வளர்த்துக் கொண்டு அவர்களின் வாக்குகளைப் பெற்றுத் தங்கள் வழமையான வண்டியை ஓட்டலாம் என்று கருதுகின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறியதைப் போலவே இதுவும். இரண்டும் மக்களை முட்டாளாக்கும் கற்பனைக் கதைகள்.**



கூட்டமைப்புத் தலைவர்களிடம் இனப்பிரச்சினைக்கான தீர்வு இல்லை. அந்த வெறுமையை மறைப்பதற்காகவே சர்வதேச சமூகம் என்ற கற்பனை. தீர்வுக்கான அணுகுமுறை பற்றிப் பேசவே தேவையில்லை. தீர்வு இல்லாமல் அணுகுமுறை எதற்கு?

இந்த நிலையிலேயே கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று இந்தியாவுக்குச் சென்று வெளிவிவகார அமைச்சர் சுஸ்மாவுடனும் பிரதமர் நரேந்திர மோடியுடனும் பேச்சுவார்த்தை நடாத்தியது. இந்தியத் தலைவர்கள் இவர்களுக்குப் பல அறிவுரைகளை வழங்கியிருக்கின்றார்கள். அந்தப் பேச்சுவார்த்தையில் பேசப்பட்ட விடயங்களை வெளியிடாமல் இரகசியமாக வைத்திருப்பதற்கு இரு தரப்பும் இணங்கியிருப்பதாக மாவை சேனாதிராசா ஒரு புதுக் கதை விடுகின்றார். இது அங்கு என்ன நடந்தது என்பதைத் தமிழ் மக்களுக்கு மூடிமறைக்கின்ற முயற்சி இந்தியத் தலைவர்கள் கூறிய விடயங்கள் கூட்டமைப்புக்கு மகிழ்ச்சி அளிப்பனவாக இல்லை. அந்த விடயங்களை மக்களுக்கு எடுத்துக் கூறினால் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அழுத்தம் மக்களிடமிருந்து வரக்கூடும் என்பதாலேயே எல்லாம் இரகசியம் என்று சேனாதிராசா புதுக்கதை பேசுகின்றார். இப்படிச் சொன்னால் இந்தியா ஏதோ செய்யப்போகின்றது என்ற எதிர்பார்ப்பை மக்களிடம் வளர்த்துக் கொண்டு அவர்களின் வாக்குகளைப் பெற்றுத் தங்கள் வழமையான வண்டியை ஓட்டலாம் என்று கருதுகின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறியதைப் போலவே இதுவும். இரண்டும் மக்களை முட்டாளாக்கும் கற்பனைக் கதைகள்.

கூட்டமைப்புடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் பிரதான அம்சங்களை இந்திய அரசாங்கம் உடனுக்குடன் உத்தியோக பூர்வ அறிக்கையாக வெளியிட்டது. கூட்டமைப்புப் பிரதிநிதிகள் முதலில் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தார்கள். பதின்மூன்றாவது திருத்தத்தின் அடிப்படையிலேயே அரசியல் தீர்வு என்று சுஸ்மா இவர்களுக்குத் தெளிவாகக் கூறிவிட்டார். பின்னர் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தார்கள். பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ்தான் தீர்வு என்று அவர் இவர்களிடம் உறுதியாகக் கூறினார். வெளிவிவகார அமைச்சரின் அலுவலகமும் பிரதமரின் அலுவலகமும் உத்தியோகபூர்வமாக வெளியிட்ட தகவல்களே இவை.

இனப்பிரச்சினையின் தீர்வு முயற்சியில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியவையாக இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட இரண்டு விடயங்கள் தொடர்பாகவும் இந்தியா அதன் நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது. உடனடியாக ஏற்க வேண்டிய தீர்வு பதின்மூன்றாவது திருத்தம் என்றும் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் ஒன்றாகக் கூடித் தீர்வு காண்பதே அதை அடைவதற்கான அணுகுமுறை என்றும் இந்தியத் தலைவர்கள் தெளிவாகக் கூறிவிட்டார்கள். கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்பதும் தெரிவுக் குழுவில் பங்குபற்ற வேண்டும் என்பதுமே இதன் அர்த்தம். இனப்பிரச்சினைக்கான தீர்வு நடைமுறையைப் பொறுத்த வரையில் இதற்கு மேல் செல்வதற்கு என்ன இருக்கின்றது? முக்கியமான விடயங்களைப் பகிரங்கமாக இந்தியா வெளியிட்ட பின் வேறென்ன இரகசியம் வேண்டும்?

கூட்டமைப்புக்கு இந்தியா கூறிய ஆலோசனைகளின் மூலமே இன்றைய நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைய முடியும். நடைமுறைச் சாத்தியமான வேறு வழிகள் எதுவும் இல்லை. ஆனால், இந்த வழிகளைப் பின்பற்றுவதற்கு கூட்டமைப்புத் தலைமை விரும்பவில்லை. கூட்டமைப்பின் செயற்பாடுகளை நிதானமாக அவதானித்து வந்தவர்களுக்கு இதற்கான காரணம் விளங்கும். கூட்டமைப்புத் தலைவர்கள் இனப்பிரச்சினையை மூலதனமாக வைத்து தங்கள் அரசியல் பதவிகளைப் பாதுகாத்துக்கொள்ள விரும்புகின்றார்களேயொழிய பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தட்டிக் கழிப்பதன் மூலமும் கூடுதலான அதிகாரங்களுடன் தீர்வு வரப்போகின்றது என்ற பொய்யான நம்பிக்கையைத் தமிழ் மக்கள் மத்தியில் வளர்ப்பதன் மூலமும் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தவிர்த்துக் கொண்டே வருகின்றார்கள். கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலனுக்காக அல்லாமல் தனிநாட்டை நாடி நிற்கும் புலம்பெயர் அமைப்புகளின் தேவைகளுக்காகவே அரசியல் நடத்துகின்றது. அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவதைத் தொடர்ச்சியாக தவிர்ப்பதன் மூலம் தனிநாட்டுக்கு ஆதரவு வளரும் என்று புலம்பெயர் அமைப்புகள் கனவு காண்கின்றன. அந்தக் கனவுக்கு அமைவாகவே கூட்டமைப்பு செயற்படுகின்றது.

இந்தியாவின் ஆலோசனைக்கு அமைவாகச் செயற்படுவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பது கூட்டமைப்புத் தலைவர்களுக்குத் தெரியும். ஆனால், புலம் பெயர் அமைப்புகளிடமிருந்து நிதி உட்பட பல்வேறு உதவிகளைப் பெறும் இவர்கள் அந்த அமைப்புகளின் கோபத்துக்கு உள்ளாக விரும்பாததால் அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவதைத் தவிர்ப்பதிலேயே கவனம் செலுத்துகின்றார்கள். அதனால் இந்தியாவின் ஆலோசனைகளை வெளிப்படையாக நிராகரிக்காமல் நாகரிகமாக நிராகரிக்கும் வகையில் இரு தரப்பும் பேசிய விடயங்களை இரகசியமாகவே வைத்திருப்பதமாக கதை அளக்கின்றார்கள். இந்தியா பெரிதாக ஒரு தீர்வைப் பெற்றுத் தரப் போகின்றது என்ற அபிப்பிராயத்தை இதன் மூலம் மக்களிடம் தோன்றுவிக்க முயற்சிக்கின்றார்கள். பெரிய தீர்வை எதிர்பார்த்து நடைமுறைச் சாத்தியமான தீர்வை மக்கள் நிராகரிப்பதற்கும் தேர்தல் காலத்தில் வாக்குகளை அள்ளிக் குவிப்பதற்கும் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்ற மந்திரத்தைப் போலவே இதுவும் கைகொடுக்கும் என்று சேனாதிராசாவும் மற்றைய தலைவர்களும் கணக்குப் போடுகின்றார்கள்.

இவர்களுக்கு அரசியல் தீர்வில் உண்மையான அக்கறை உண்டென்றால் இன்னொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரினால் அரசாங்கத்துக்கும் கூட்டமைப்புக்குமிடையே இரு தரப்புப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு அரசாங்கம் தயார் என்று சுசில் பிரேமஜயந்த அண்மையில் கூறினார். கூட்டமைப்பு கோரிக்கை விடுக்காது என்றும் அரசாங்கம் வேண்டுமானால் பேச்சுவார்த்தைக்கு அழைக்கட்டும் என்று சுமந்திரன் சொல்கிறார். தமிழ் மக்களின் நலன் கருதி இவர்கள் கோரிக்கை விடுவதால் என்ன குறைந்துவிடப் போகிறது? இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தட்டிக்கழிக்கும் தந்திரோபாயங்களுள் இதுவும் ஒன்று.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலம் பெயர் அமைப்புகளின் தாளத்துக்கு ஆடிக்கொண்டிருக்கின்றது என்பதையும் இனப்பிரச்சினையின் தீர்வைத் தவிர்ப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கு குழிபறிக்கின்றது என்பதையும் புரிந்து கொள்வதிலேயே தமிழ் மக்களின் விமோசனம் தங்கியுள்ளது.

# பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அரசின் சீற்றம் ஐ.நா. மீது

United Nations

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் உப அமைப்புக்கள் அநாவசியமாக தலையீடு செய்வதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது என்று சட்டமா அதிபர் திணைக் களம் தெரிவித்துள்ளது.

அரசியல் சாசனத்தை மீறிச் செயற்படக்கூடிய அதிகாரம் எந்தத்தரப்பிற்கும் கிடையாது என சட்ட மா அதிபரால் நீதிமன் றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

240 பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவதனைத் தடுக்குமாறு கோரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணைகளில் பங்கேற்றபோதே சட்ட மா அதிபர் சார்பில் நீதி மனறில் ஆஜராகிய பிரதி சொலி சுட்டர் ஜெனரல் ஜனக் டி சில்வா இவ்வாறு தெரிவத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக கான முகவர் நிறுவனம் இலங்கையின் ஒரு சில பாதுகாப்பு விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக் கான முகவர் நிறுவனமோ அல்லது வேறும் மேற்குலக நாடுகளின் அமைப்புக்களோ அரசியல சாசனத்தின் வரையறைகளை மீறிச் செயற்பட முடியாது என்பதனை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மேன்முறையீட்டு நீதவான் உபாலி அபேரட்ன முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

வழக்கு விசாரணைகள் பூர்த தயாகியுள்ளதாகவும் நாளை 1 ஆம் திகதி தீர்ப்பை அறிவிக்க உள்ளதாகவும் நீதவான் தெரிவித்துள்ளார்.

இலங்கை குடிவரவு குடிய கழ்வு சட்டங்களின் அடிப்படையில் எந்தவொரு வெளிநாட்டுப் பிரஜையும் உரிய கடவுச்சீட்டு மற்றும் வீசா இன்றி நாட்டில் தங்கியிருக்க முடியாது என பிரதி சொலிசுட்டர் ஜெனரல் ஜனக் டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவதற்கு விதிக்கப்பட்ட இடைக் கால தடையுத்தரவினை நீக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

இதேவேளை, மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைகள் பூர்த்தியாகும் வரையில் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படக்கூடாது என புகலிடக் கோரிக்கையாளர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரியுள்ளனர்.

# புதிய அரசியல் சாசனம் வரைகிறது ஹெல உறுமய

## கசிகிறது தகவல்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரதன தேரர் புதிய அரசியல் சாசனமொன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னணி சட்டத்தரணிகளின் பங்களிப்புடன் அரசியலமைப்புத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அடுத்த மாதமளவில் புதிய அரசியல் சாசன வரைவுத் திட்டம் உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஜனாதிபதி முறைமை, தேர்தல் முறைமை, அமைச்சர்களின் பொறுப்புக்கள், 17 ஆம் திருத்தச் சட்டமூலம் அமுலாக்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் புதிய அரசியல் சாசனத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

புதிய அரசியல் சாசனம் தொடர்பில் ஊடகங்களுக்கு தகவல்கள் வெளியிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# போதை வர்த்தகம் தெற்கில் பூதாகரம் சவால்களை சுமக்கும் பொலிஸார்

போதை வர்த்தகத்தில் ஈடுபடும் வியாபாரிகளும் அவைகளைக் கடத்தும் கும்பல்களுக்கு இப்போது தெற்கில் பொலிசாருக்கு பெரும் சவாலாக உருவெடுத்து வருகின்றனர். போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபடுவோர் பொலிஸாருக்கு அச்சுறுத்தல் செய்வது இப்போது அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணி வரும் பாதாள உலகக் குழுவினர் இவ்வாறு பொலிஸாரை அச்சுறுத்தி வருகின்றனர்.

குறிப்பாக விசாரணைகளை நடத்தி வரும் அதிகாரிகள் இவ்வாறு அச்சுறுத்தப்படுவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அச்சுறுத்தல்களை எதிர் நோக்கி வரும் அதிகாரி களுக்கு கடமை முடிந்து வீடு திரும்பும்போது பாதுகாப்பு நோக்கிற்காக கைத்துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் கைது செய்யப்பட்ட சில போதைப்பொருள் வரத்தகர்கள், சிறையில் அடைகப்பட்ட உடனேயே செல்லிட பேசிகள் அவர்களுக்கு கிடைக் கப்பெற்றுள்ளன. சிறைச்சாலையிலிருந்து கொண்டே விசாரணை நடத்தும் பொலிஸ் அதிகாரிகளை போதைப்பொருள் வர்த்தகர்கள் அச்சுறுத்தி வருகின்றனர்.

சிறையினுள் எத்தனை சுற்றி வளைப்புக்கள் நடத்தினாலும் சில கைதிகள் ஒன்றுக்கும் மேற்பட்ட செல்லிடபேசிகளை வைத துள்ளனர். இதேவேளை, கைதிகள் சிறைச்சாலையில் செல்லிடப் பேசிகளை பயன்படுத்துவதனை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திரனுக்கு வலுவடையும் அச்சுறுத்தல்கள்

## அளுத்கம சம்பவத்தின் எதிரொலி

(கொழும்பு)

அளுத்கம வன்முறைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள 13 பேரையும் விடுதலை செய்யுமாறு முன்வைக்கப்பட்ட வேண்டுகோளைப் புறக்கணித்ததற்காக பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திரனுக்கு பாரிய அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அளுத்கம, பேருவளை மற்றும் தர்கா நகர் பிரதேசத்தில் இடம் பெற்ற வன்முறையின் போது அப்பிரதேசத்துக்குப் பொறுப்பாகவிருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் வீ. இந்திரன் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப் பட்டிருந்தார்.

அவருக்கு எதிராக நடாத்தப்படவிருந்த ஒழுக்காற்று விசாரணையும் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது.

இவர் இம்மாதம் முதல் பகுதியில் களுத்தறை மாவட்டத்திலிருந்து பொலிஸ் சமூக நலப பிரிவுக்கு மாற்றப்பட்டார். இதே வேளை, இவருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வேறு ஒரு விசாரணைக்கு, ஏற்கனவே, இவரினால் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பொலிஸ் அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன கருத்துத் தெரிவிக்கையில்,

அளுத்கம சம்பவத்துக்கும் தற்பொழுது அவரிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைக்கும் எநதவிதமான தொடர்பும் இல்லையென அவர் தெரிவித்துள்ளார்.

# சவூதி குடிவரவு அதிகாரிகள் மிகவிரைவில் கொழும்புக்கு

(கொழும்பு)

சவூதி நாட்டின் குடிவரவு, வேலை வாய்ப்பு வழங்கும் திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் தெற்காசிய நாடுகளுக்கு வருகை தரவுள்ளனர். இந்த நாடுகளில் இருந்து வேலை வாய்ப்புக்காக சவூதிக்கு செல்பவர்கள் முகவர்களின் பொய்யான பரப்புரைகளை நம்புகின றனர்.

இதுதவிர முகவர்கள் சிலருக்கு போலியான ஆவணங்களைத் தயாரித்து வழங்குவதுடன் அங்குள்ள சட்டங்கள் குறித்து போதுமான அறிவூட்டல்களையும் வழங்குவதில்லை.

இவ்வாறான காரணங்களினாலேயே இலங்கையிலிருந்து சென்ற ரிசானா நபீக் மரண தணடனைக்கு உள்ளாக வேண்டியிருந்தது.

எனவே இவ்வாறான விடயங்கள் குறித்து விளக்கமளிக்கவும், சவூதி சட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்கவுமே அவர்கள் இந்த நாடுகளுக்கு 5 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# வழிபாட்டு சுதந்திரம் மறுப்பு பாக்.கிரிக்கெட் வீரர்கள் சலிப்பு

கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள், தம்புள்ள பள்ளிவாசலில் தொழுகைகளை மேற்கொள்ள அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிகள் நேற்று தம்புள்ளையில் அமைந்துள்ள ரங்கிரி சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்கேற்கும் நோக்கில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியினர் நேற்று முன்தினம் தம்புள்ளைக்குச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை தொழுகைகளை மேற்கொள்ள தம்புள்ளையில் அமைந் துள்ள மஸ்ஜிதுள் ஹய்ரா பள்ளி வாசலுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர்களும் ஏனைய அதிகாரிகளும் முயற்சித்துள்ளனர். எனினும் பாதுகாப்பு தரப்பினரால் அங்கு செல்ல இவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

# விமானசேவை விஸ்தரிப்பு இலங்கை - சீனாவுக்கு இடையில்

சீனாவிற்கான விமானப் பயணங்கள் அதிகரிக்கப்பட உள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் திமுத்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சீனாவின் பெயஜிங்கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளார்.

சீனாவின் 15 உப நகரங்களுக்கு நேரடி விமான சேவைகளை ஆரம்பிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. உப நகரங்களில் பிரசாரப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விரைவில் எந்தெந்த நகரங்களில் விமான சேவைகளை நடாத்துவது என்பது குறித்து தீர்மானிக்கப்படும்.

தற்போது சீனாவின் நான்கு நகரங்களுக்கு வாரமொன்றில் 15 விமானப் பயணங்களை ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் மேற்கொள்கின்றது.

இலங்கையின் பிரதான சுற்றுலா சந்தைகளில் ஒன்றாக சீனா அடையாளம் காணப்பட்டுள்ளது என திமுத்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

# அநியாய உயிரிழப்பு தெற்கில் தினசரி இருபது

உரிய முதலுதவி வழங்கப்படாத காரணத்தினால் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 20 பேர் நாள் தோறும் உயிரிழக்கின்றனர். உரிய முதலுதவி வழங்கப்படாத காரணத்தினால் இருதய செயற்பாடு ஸ்தம்பித்து நாள் தோறும் கொழும்பு மாவட்டத்தில் 20 பேர் அகால மரணமடைகின்றனர் என மருத்துவர் தனஞ்சய புலதெனிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழப்போரில் குறைந்தது பத்து பேருக்கு இருதயத் துடிப்பு ஸ்தம்பித்து ஆறு நிமிடங்களுக்குள் உரிய முதலுதவிகளை வழங்கினால் உயிர் காக்க முடியும்.

முதலுதவி வழங்குவது தொடர்பில் மக்களுக்கு போதிய அறிவின்மையே இந்த இழப்புகளுக்கு காரணமாகும்.

ஏதேனும் விபத்தோ அல்லது பாதிப்போ ஏற்பட்டால் அந்த நோயாளிக்கு முதல் ஒரு மணித்தியாலத்தில் உயிர் காக்கும் சிகிச்சைகளை வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பயிற்சி நெறியொன்றில் பங்கேற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# மன்னாரிலுள்ள கூட்டுறவு சங்கங்களின் பிரச்சினை தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கூட்டுறவு அமைச்சின் பிரதி நிதிகளுக்கும் மன்னார் மாவட்ட மீன்பிடி, கால் நடை, பனை, தென்னை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்று, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சாமசத்தில் தலைவர் என்.எம்.ஆலம் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது, வடமாகாண சபை உறுப்பினரும், வடமாகாண கூட்டுறவு அமைச்சின் விசேட பிரதிநிதியுமான சட்டத்தரணி எஸ்.சயந்தன், வடமாகாண கூட்டுறவுத் திணைக்கள பிரதம அலுவலகர் உதயன், மன்னார் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர். மங்களதாசன் மற்றும் மாவட்டத்தின் மீனவ சங்கம், கால்நடை வளர்ப்போர் சங்கம் மற்றும் பனை தென்னை உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

தற்போது மன்னார் மாவட்டத்தில் கூட்டுறவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் தொடர்ச்சியாக எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண கூட்டுறவு அமைச்சின் பிரதி நிதிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இதன்போது, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் இந்திய மீனவர்களினால் எதிர் நோக்கும் பிரச்சினைகள், மீனவர்களின் காப்புறுதியில் உள்ள சிக்கல்கள், மீனவர்களுக்கு வழங்கப்படும் பாதிப்பு நிவாரணங்களில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் வருகை தந்த பிரதி நிதிகளுக்கு மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் என்.எம்.ஆலம் தெளிவுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## காலாவதியான ஐஸ்கிறீமை விற்றவருக்கு அபராதம்

(கிளிநொச்சி)

காலாவதியான ஐஸ்கிறீமை விற்பனை செய்த கிளிநொச்சி நகர்ப்பகுதி கடை உரிமையாளருக்கு அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் தீர்ப்பளித்தார்.

கிளிநொச்சி பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி நகர்ப்பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில், காலாவதியான ஐஸ்கிறீமை விற்பனை செய்த மேற்படி கடைக்காரர் பிடிபட்டார்.

தொடர்ந்து, மேற்படி கடைக்காரருக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து நீதவான் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## அனர்த்தம் குறித்து பயிற்சிப் பட்டறை

(கிளிநொச்சி)

தற்போது கடும் வறட்சி நிலவுகின்ற நிலையில் தீ விபத்துக்கள் ஏற்படும் பட்சத்தில் அவற்றைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதற்காக வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி பட்டறை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் இப் பயிற்சி பட்டறை நடைபெற்றது.

தீ விபத்துக்கள் ஏற்படும் போது அவற்றை உடனடியாக கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்காக மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகள் மற்றும் தற்போதைய சூழ்நிலையில் தீ விபத்துக்கள் ஏற்படுவதற்கான எவ்வித வாய்ப்புக்கள் உள்ளமை தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கட்டுப்பாட்டு விலைகளில் அரிசி விற்பதற்கு தடையாகவுள்ள விடயங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் அவசர கலந்துரையாடலை யாழ்.வணிகர் கழகம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.வணிகர் கழக பணிமனையில் ஒழுங்கு செய்துள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ்மாவட்டத்திலுள்ள அனைத்து வர்த்தக சங்க பிரதிநிதிகளையும் மற்றும் அரிசி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களையும் பங்குபற்றுமாறு வணிகர் கழகத்தின் செயலாளர் ஜனக்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

## விடுதி அமைப்பு

வரணிப்பிரதேச வைத்திய சாலையில் சேவையில் ஈடு பட்டுவரும் அம்புலன்ஸ் வண்டியை பாதுகாப்பாக நிறுத்துவதற்கு தற் போது விடுதி ஒன்று அமைக் கப்பட்டுள்ளது.

மேலும் சாரதி தங்கி நின்று சேவை செய்வதற்கும் அதனுடன் இணைத்து சிறிய அறை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (150)

## முரசின் இன்றைய பலன்




(31.08.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் ஆவணி மாதம் 15 ஆம் திகதி.
சித்தம் / ஷஷ்டி.
சுவாதி நட்சத்திரம் பி.ப. 02.52 வரை. பின் விசாகம்.
இராகு காலம் 04.35 - 06.05 வரை. சுபநேரம் 09.05 - 10.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பெற்றோரின் விருப்பத்தால் மணம் முடிக்க விரும்புதல், அநாமதேய அழைப்பால் அச்ச உணர்வு ஏற்படல். |
| ரிஷபம் | பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடன் கட்ட முடியாது திக்குமுக்காடல். |
| மிதுனம் | பிள்ளைகளின் தான்தோன்றித்தனத்தை மாற்ற முயல்தல், பாவனைக்குதவாத வானகத்தை விற்க முயல்தல். |
| கடகம் | உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பு, தேடிய நபர் சமுகமளித்தல். |
| சிம்மம் | பூர்வீக சொத்தினை விற்க முயற்சி, தவறான காரியத்தால் தண்டம் பெறல். |
| கன்னி | பொழுது போக்குகளைத் தவிர்ப்பதும் நன்மை தரும், கூட்டுத்தொழில் எதிர்பார்த்த இலாபம் கிட்டாமையினால் தனித்தியங்க முற்படல். |
| துலாம் | சமாளித்து முன்னேறுதல், ஏழரைச்சனி உள்ளதால் புதிய வியாபார நிலையம் திறப்பதற்கு தயக்க மேற்படல். |
| விருச்சிகம் | குடும்பவிடயங்களை நம்பிக்கை அற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளாதிருப்பது நன்றாகும், உறவினரிடையே மனக்கசப்பு |
| தனுசு | நோயைக் குணப்படுத்த தெய்வ தலத்தை நாடுதல், நிச்சயார்த்தம் அமங்கல நிகழ்வினால் ஒத்தி வைத்தல். |
| மகரம் | உற்றார் உறவினர்களிடையே சுமூக உறவு, குடும்பத்தில் மகிழ்வு. |
| கும்பம் | வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கிட்ட, நண்பரினால் உதவி கிடைத்தல், தொழில் பெற முயற்சித்தல். |
| மீனம் | காப்பாற்றிக் கொள்வதில் சிக்கல் ஏற்படும், வியாபாரத்தில் நஷ்டமடைதல். |

## செல்வச்சந்நிதியானுக்கு இன்று ஏழாம் திருவிழா



## ஆற்றங்கரை நாயகனே!

மன்னுபுகழ் வேலனைநாம் மயிலாகிச் சுமந்திடுவோம்
கன்னியரும் காளையரும் காவடிகள் ஆடிடுவோம்
இன்னுயிரைக் காத்திடென்று இரந்துநாம் வேண்டிடுவோம்
பன்னிரு கரத்திலொன்று எமையணைக்கும் உணர்ந்திடுவோம்

தொன்மையுறு ஆற்றிலெங்கள் தோஷங்கள் கரைத்திடுவோம்
மென்மணலில் புரண்டேநாம் மேன்மைகளைச் சேர்த்திடுவோம்
நன்மையெலாம் அவனருளால் நாடிவரும் பெற்றிடுவோம்
என்நாளும் வேலெமக்குத் துணையென்று நம்பிடுவோம்.


ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம், மூளாய்.

## குறைபோக்கும் அழகய்யா!

சந்நிதியான் செல்வச் சந்நிதியான்
சஞ்சலங்கள் தீர்க்கும் சந்நிதியான்
ஆற்றங்கரை அமர்ந்த ஆறுமுகா
அடியவர் குறைபோக்கும் அழகய்யா
அன்னதானக் கந்தன் நீயய்யா.

எஸ்.சேரன், அச்சுநகர்.

## தெல்லிப்பளை துர்க்கையம்மனை கவிதையால் துதிசெய்வோம்



## துர்க்காதேவியே தஞ்சம்!

பஞ்சம்போர் வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ துர்க்காதேவி - தஞ்சமெனுஞ்
சொல்லும் பலிக்குமினிச் சோகமெலாந் தீர்ந்திடவே
நல்லதுகை கூடும் நமக்கு.

துர்க்கை அம்மன் நமக்குண்டே லென்னகுறை
எல்லாம் எளிதாக ஈடேறும் பொல்லாங்கு
போவென்றாற் போகும் பொருளும் புகலிடமும்
வாவென்னச் சேருமே வந்து.

கை.சிவானுகா, கொழும்புத்துறை.

(தெல்லிப்பளை துர்க்கையம்மனுக்கு
இன்று ஐந்தாம நாளி திருவிழா)

## திசர பெரேராவிடம் சுருண்டது பாகிஸ்தான்

# தொடரை வென்றது இலங்கை




(தம்புள்ள)

திசர பெரேராவின் அபாரமான பந்து வீச்சின் மூலம் பாகிஸ்தான் அணிக்கெதிரான இறுதி ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி, பெரு வெற்றிபெற்றது. அத்துடன் ஒரு நாள் தொடரையும் கைப்பற்றிக் கொண்டது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக் கிடை யிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று தம்புள்ளவில் நடை பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி முதல் மூன்று விக்கெட்டுக்களை யும் 14 ஓட்டங்களுக்குள் பறிகொடுத் தது. இந்நிலையில் நான்காவது விக் கெட்டுக்காக இணைந்த கப்டன் மிஸ்பா மற்றும் பவட் அலாம் இணை பொறுப் புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக் கையை ஆமை வேகத்தில் அதிகரித் தனர். இந்நிலையில் இந்த ஜோடி (மிஸ்பா) ரன் அவுட் மூலம் பிரிக்கப்பட் டது. இதன் பின்னர் திசர பெரேரா வின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் பாகிஸ்தான் வீரர்களின் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் தாரைவார்த்தனர். ஒரு முனையில் பொறுமையாக ஆடிய பவட் அலாம் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திக் கொள்வதில் ஆர்வமாக இருந்தார். இருப்பினும் அவருக்கு எந்தவொரு வீரரும் ஒத்துழைப்பு வழங்க வில்லை. இறுதியில் பாகிஸ்தான் அணி 32.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட் டுக்களையும் இழந்து 102 ஓட்டங்களுக் குள் சுருண்டது. இதில் பவட் அலாம் 73 பந்துகளை எதிர்கொண்டு மூன்று பவுண்டரிகள் அடங்லாக ஆட்டமிழக் காது 38, மிஸ்பா உல் ஹக் 18, அகமட் ஷஹாட் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் திசர பெரேரா 34 ஓட்டங் களைக் கொடுத்து நான்கு, பிரசாத் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

சிறு மழை காரணமாக இப்போட்டி இரண்டு ஓவர்கள் குறைக்கப்பட்டதுடன் இலங்கை அணிக்கு வெற்றியிலக்காக 101 ஓட்டங்கள் வழங்கப்பட்டது. இதற் கமைய களமிறங்கிய இலங்கை அணி ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடி ஓட்டங்களை வேகமாகச் சேர்ந்தது. குறிப்பாக டில்சான் வேகமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதி கரித்தார். இறுதியில் இலங்கை அணி 18.2 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றி யிலக்கை அடைந்தது. இதில் டில்சான் 55 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக் காது 50 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் மஹேல ஜெயவர்த்தன 26, தரங்க 14 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட மிழந்தனர். இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை அணி கைப்பற்றிக் கொண் டது. ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதை திசர பெரேரா பெற்றார்.



## நான்காவது சுற்றில் ஷரபோவா

(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் நான்காவது சுற்றுக்கு மரியா ஷர போவா மற்றும் ரோஜர் பெடரர் ஆகியோர் முன்னேறியுள்ளனர். கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 3ஆவது சுற்று ஆட்டத்தில் 2ஆம் நிலை வீரரும், 5 முறை சம்பியனான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) அவுஸ்ரேலியா வீரர் குரோத்தை 6-4, 6-4, 6-4 என்ற நேர்செட் கணக்கில் வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

இதேவேளை,. பெண்கள் ஒற்றையர் பிரிவில் 3ஆவது சுற்று ஆட்டங்கள் நடைபெற்றது. இதில் 5ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷர போவாவும், 28ஆம் நிலை வீராங்கனை லிசிக்கியும் (ஜேர்மனி) மோதினர். இதில் முதல் செட்டை 6-2 என்ற கணக்கில் ஷரபோவா எளிதாக கைப்பற்றினார். 2ஆவது செட்டில் லிசிக்கி நெருக்கடி கொடுத்தார். இருந்தபோதிலும் அந்த் செட்டையும் ஷரபோவா 6-4 என்ற கணக்கில் கைப்பற்றி வெற்றியை உறுதி செய்து 4ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.

3ஆவது சுற்றில் 2ஆம் நிலை வீராங்கனையான சிமோன் ஹலேப் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். அவர் 7-6 (8-6) 6-2 என்ற கணக்கில் குரோஷியா வீராங்கனை லுசிக் பொரோனியிடம் தோற்று வெளியேறினார். இத்தாலி வீராங்கனை இரானி 6-0, 0-6, 7-6 (7-5) என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்சை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

சப்ரோவா (செக்குடியரசு) 6-3, 6-7 (3-7), 6-4 என்ற செட் கணக்கில் கோர்னாட்டை (பிரான்ஸ்) வீழ்த்தினர். டென்மார்க் வீராங்கனை வோஸ்னாக்கி 6-3, 6-2 என்ற கணக்கில் பெட்கோவிக்கை (ஜேர்மனி) வீழ்த்தினார்.

இதேபோல ஜொன்கோவிக் (சேர்பியா), கெர்பர் (ஜேர்மனி), பெங் (சீனா) ஆகி யோரும் 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.


## அளவெட்டி மத்தியின் மென்பந்து கிரிக்கெட்

(அளவெட்டி)

அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் நடாத்தும் வலி. வடக்கின் சமர் மென்பந்து கிரிக்கெட் தொடர் இன்றும் நாளையும் அளவெட்டி மத்தி விளை யாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற வுள்ளது.

அழைக்கப்பட்ட அணிகள் பங்கு கொள்ளவுள்ள இம்மென்பந்து கிரிக்கெட் தொடர் அணிக்கு 11 பேரைக் கொண்ட தாகும். இதில் அளவெட்டி மத்தி, அளவெட்டி ஞானவைரவர், மல்லாகம் ஆர்.டி.எஸ். அணிகள் மோதவுள்ளன. இப்போட்டித் தொடரில் கிண்ணத்தை வெல்லும் அணிக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## காலிறுதிப் போட்டியில் சான்யா தோல்வி



(கோபன்ஹேகன்)

உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் போட்டித் தொடரிலிருந்து இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் வெளியேற்றப்பட்டுள்ளார்.

கோபன்ஹேகன் நகரில் நடைபெற்று வரும் உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால், சிறப்பாக விளையாடி காலிறுதி வரை சென்றார். நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் அவர் தரநிலையில் முதல் இடத்தில் இருக்கும் சீன வீராங்கனை லி சுவேரூயியை எதிர்கொண்டார்.


கடும் சவால் நிறைந்த இந்த ஆட்டத் தில் சாய்னா நேவால் 15-21, 15-21 என்ற நேர்செட்களில் தோல்வியடைந்தார். இவர்கள் இருவரும் நேருக்கு நேர் சர்வதேச களத்தில் சந்திப்பது இது 10ஆவது முறையாகும். இதில் 8 முறை சீன வீராங்கனை வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## றொனால்டினோவுக்கு வலைவீச்சு

முதலாவது இந்தியன் சூப்பர் லீக் (ஐஎஸ்எல்) கால்பந்து போட்டியில், பிரேசிலைச் சேர்ந்த பிரபல கால்பந்து வீரர் றொனால்டினோவை வாங்க, சென்னை அணி முயூற்சித்து வருவ தாகத் தெரிகிறது.

இதுதொடர்பாக றொனால்டினோவின் சகோதரரும், அவரது முகவருமான ராபெர்டோ டி அஸிஸ் உடன் சென்னை டைட்டன்ஸ் அணி பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாகத் தகவல் வெளியாகி உள் ளது. இந்த பேச்சுவார்த்தை வெற்றி பெறும் பட்சத்தில், ராபெர்டோ விரைவில் றொனால்டினோவை இந்தியாவுக்கு அழைத்து வருவார் என்றும், ஆங்கிலப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகி உள்ளன. தற்போதைக்கு றொனால்டினோ எந்த கிளப் அணியுடனும் ஒப்பந்தம் செய்யவில்லை. ஆனால், அவர் அமெ ரிக்காவில் நடைபெறும் மேஜர் லீக் சாக்கர் தொடரில் ஆட விரும்புகிறார். ஐஎஸ்எல் போட்டியில் ஆடுவதன் மூலம், அமெரிக்க லீக் போட்டியில் ஆடுவது பாதிக்கப்படாது என்பதால், இரண்டு முறை உலகின் சிறந்த கால்பந்து வீரர் விருதை வென்ற றொனால்டினோ, இந்தியாவுக்கு வர வாய்ப்பு இருப்பதாக பேச்சு அடிபடுகிறது.

## தென்னாபிரிக்காவுக்கு 2ஆவது வெற்றி



(ஹராரே)

சிம்பாப்வேயில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒரு நாள் தொடரில் தென்னாபிரிக்க அணி இரண்டாவது வெற்றியைப் பதிவாக்கியுள்ளது.

அவுஸ்ரேலியா, சிம்பாப்வே, தென்னாபிரிக்க ஆகிய 3 நாடுகள் இடையேயான முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டி சிம்பாப்வேயில் உள்ள ஹராரேவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது லீக் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா-சிம்பாப்வே அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி 49.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அம்லா 66, குயின்டன் டி கொக் 76 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அசத்தி உத்சேயா ஹட்ரிக் உட்பட ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அத்துடன் ஹட்ரிக் சாதனை புரிந்த இரண்டாவது சிம் பாப்வே வீரர் என்ற சிறப்பையும் உத்சேயா பெற்றுக் கொண்டார்.

பதிலுக்கு 233 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி 38.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் வில்லியம்ஸ் 40 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஸ்ரெய்ன், மைக் லரென் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டி யின் ஆட்டநாயகனாக ஹட்ரிக் சாதனை புரிந்த உத்சேயா தெரிவுசெய்யப்பட்டார்.

### வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடாத்தும் கால்பந்து

# காலிறுதிக்கு முன்னேறிய அணிகள்



(உரும்பிராய்)

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதிக்கு ஊரெழு றோயல், நவிண்டில் கலைமதி, வதிரி பொம்மேர்ஸ் அணிகள் முன்னேறியுள்ளன.

பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக நிதி திரட்டும் முகமாக வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினால் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டித் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடாத்தப்பட்டு வருகின்றது.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இப்போட்டித் தொடர் யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் நான்காவது சுற்று ஆட்டங்கள் கடந்த வாரம் நடைபெற்றன. இதில் முதல் போட்டியில் வதிரி பொம்மேர்ஸ் அணியும் தெல்லிப்பளை நாமகள் அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக்கொண்டன. முதல் பாதியில் பொம்மேர்ஸ் அணியும் பிற்பாதி ஆட்டத்தில் நாமகள் அணியும் தலா ஐந்து கோல்களைப் போட்டு இரசிகர்களின் மனதை தங்கள் பக்கம் ஈர்த்துக் கொண்டன. வெற்றிக் கோலை போட்டுக்கொள்ள இரு அணிகளும் முயன்றபோதிலும் இறுதி வரை முடியவில்லை. இதன் காரணமாக 5-5 என்ற கோல் கணக்கில் இப்போட்டி நிறைவுக்கு வந்தது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் வதிரி பொம்மேர்ஸ் அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது.


தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் நவிண்டில் கலைமதி அணியும் பண்டத்தரிப்பு பிறைட் ஸ்ரார் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நவிண்டில் கலைமதி அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மற்றுமொரு போட்டியில் ஊரெழு றோயல் அணியும் அராலி அண்ணா அணியும் மோதின. இதில் ஊரெழு றோயல் அணி 9-1 என்ற கோல் கணக்கில் பெரு வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.


இதேவேளை, நேற்று முன்தினம் இரண்டு போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணியும் மோதின. இதில் சென். மேரிஸ் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் அராலி ஜேம்ஸ் அணியும் மோதின. இதில் உடுப்பிட்டி நவஜீவன் அணி 7-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

(93)



வேலணை செவிப்புலன் வலுவற்றோர் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை அதன் கழக மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. இதில் தீவகம், யாழ்ப்பாண விளையாட்டு கழக வீரர்களின் கால்பந்து, மென்பந்து கிரிக்கெட் வலைப்பந்தாட்டம் போன்ற போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டி நிகழ்வில் வேலணை பிரதேச சபைத் தலைவர் சி. சிவராசா, வேலணை ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் கமல்ராஜ், யாழ்ப்பாண செவிப்புலன் வலுவற்றோர் விளையாட்டுக்கழகத் தலைவர் கெ. நடனசபேசன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். விருந்தினராக கலந்து கொண்ட சி. சிவராசா கிண்ணம் வழங்குவதைக் காணலாம்.



## வழங்கப்பட்டது உதவித் தொகை

மன்னார் மாவட்டத்தில் விளையாட்டுத் துறைகளில் சிறப்புத் திறமை காட்டும் மாணவர்களுக்கு விளையாட்டுத் துறை அமைச்சால் மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகை அண்மையில் மன்னார் நகர சபையில் இடம் பெற்ற நிகழ்வின் போது குறித்த மாணவர்களுக்கு அமைச்சர் ரிசாத் பதியுதீனினால் வழங்கி வைக்கப்பட்டது.

அமைச்சர் ரிசாத் பதியுதீன், விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயிடம் கேட்டுக் கொண்டதற் கிணங்க குறித்த உதவித் தொகை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மாணவர்கள் 170 பேருக்கு தொடர்ச்சியாக மாதந்தோறும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## ரொனால்டோவிற்கு விருது

ஐரோப்பிய கால்பந்தாட்ட சிறந்த வீரராக போர்த்துக்கல் அணித்தலைவரும், ரியல் மட்ரிட் கழக வீரருமான கிறிஸ்டியானோ ரொனால்டோ தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஐரோப்பாவின் சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான போட்டியில் நெதர்லாந்து வீரர் ஆர்ஜன் ரொபன், ஜேர்மனி வீரர் மனுஎல் நெயுர் ஆகியோருடன் போட்டியிட்டு ரொனால்டோ இந்த விருதை தனதாக்கியுள்ளார்.

இந்த விருதை பெறும் நான்காவது வீரர் இவர். இதற்கு முன்னர் பிரான்ஸ் நாட்டின் பிரான்க் ரிபேரி, ஸ்பெயின் வீரர் அன்றேஸ் இனியஸ்டா, ஆர்ஜன்டீன வீரர் லியனொல் மெஸ்ஸி ஆகியோர் வென்றுள்ளனர். மெஸ்ஸி அவரின் பார்சில்னோ கழகத்திற்காக விருதைப் பெற்றுக் கொண்டார். ஊடகவியலாளர்களினால் வாக்களித்து தெரிவு செய்யப்படும் இந்த விருதுக்கு 54 பேர் ரொனால்டோவுக்கு ஆதரவாக வாக்களித்து இருந்தனர். இந்த விருதுக்காக தான் கடினமாக உழைத்ததாகவும், தனக்கு 'நல்லதொரு அணி கிடைத்துள்ளதாகவும் நல்ல அணி இல்லாமல் தனி நபர் விருது சாத்தியமில்லை எனவும் ரொனால்டோ தெரிவித்துள்ளார். உலகின் சிறந்த வீரர் என்ற விருதும் தற்சமயம் ரொனால்டோ வசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரிவு 3இன் முதல் சுற்றின் இறுதி ஆட்டம் கிண்ணம் வென்றது யாழ். சென்றலைட்ஸ்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கிரிக்கெட் சங்கம் நடாத்திய பிரிவு மூன்றின் முதல் சுற்று போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ். சென்றலைட்ஸ் அணி வெற்றி பெற்றது.


இலங்கை கிரிக்கெட் சங்கம் நடாத்தும் பிரிவு மூன்றின் மாவட்ட அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் பதிவிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டிகள் கடந்த ஒரு மாதமாக நடைபெற்று வந்தன. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த 24ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் யாழ். சென்றலைட்ஸ் அணியும் பற்றீசியன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். சென்றலைட்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பற்றீசியன்ஸ் அணி வதுசனனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. நோபேட் ஒரு முனையில் தாக்குப் பிடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் பற்றீசியன்ஸ் அணி 35.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நோபேட் 38, முரளி 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வதுசனன் நான்கு, கிரிசாந் இரண்டு, மயூரன், எரிக் துசாந் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 110 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி 17.5 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டர்வின், மயூரன் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 26, 18, ஜெம்ஸ் 26, ஸ்ரீபன் 21 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் லிவிங்டன் மூன்று, நிதர்சன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் யாழ். சென்றலைட்ஸ் அணி இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது. இரண்டாவது சுற்று ஆட்டங்கள் மாகாண அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(எஸ்.பி.)





# வலையில் கிடைத்தவை...

### இந்தியா 13 ஆவது திருத்தம் மீது பெரும் அக்கறை கொண்டுள்ளது

சுப்பிரமணியம் சுவாமி ஒரு சர்ச்சைக்குரிய நபர் என்பது இந்தியர்களுக்குத் தெரியும். அவர் புலிகளுக்கும் இஸ்ரேலிய மொஸாட் புலனாய்வுப் பிரிவினருக்கும் இடையே உறவை ஏற்படுத்திக் கொடுத்தார் என 1991 ஆம் ஆண்டு முன்னாள் மொஸாட் உளவாளியான விக்டர் ஒஸ்றொவ்ஸ்க்கி தமது "பை வே ஒப் டிஷெப்ஷன்" (By way of Deception) என்ற நூலில் குறிப்பிட்டு இருந்தார். இதனை கலாநிதி தயான் ஜயதிலக்கவின் தந்தையான காலஞ்சென்ற மூத்த ஊடகவியலாளர் மேர்வின் சில்வா தாம் நடாத்திய லங்கா காடியன் சஞ்சிகையிலும் 1991 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிய இதழிலும் குறிப்பிட்டு இருந்தார்.

ஒஸ்றொவ்ஸ்கியின் விளக்கத்தின் பிரகாரம் நிலக்கண்ணி வெடி பற்றிய நிபுணத்துவம் உட்பட ஏனைய விடயங்களுக்காக புலிகளுக்கு இஸ்ரேலின் உதவியை பெற்றுக் கொடுப்பதற்காக சுவாமி தமது ஹாவர்ட் தொடர்புகளை உபயோகித்துள்ளார் என மேர்வின் சில்வா தமது சஞ்சிகையில் குறிப்பிட்டு இருந்தார்.

அதனை அடுத்து புலிகளுக்கும் மொஸாட் உளவுப் பிரிவுக்கும் இடையிலான உறவை விசாரணை செய்வதற்காக, அப்போதைய ஜனாதிபதி ரணசிங்ஹ பிரேமதாச ஆணைக்குழுவொன்றையும் நியமித்து இருந்தார்.

ஆனால், அதே ஆண்டு இடம்பெற்ற ராஜீவ் காந்தி கொலையை அடுத்து சுவாமி புலிகளை கடுமையாக எதிர்த்து வருகிறார். அந்த அடிப்படையிலேயே அவர், இப்போது இலங்கை அரசாங்கத்துடன் மிகவும் நெருக்கமாக செயற்பட்டு வருகிறார்.

அதில் நியாயம் இருந்த போதிலும் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் இந்தியாவுக்கு அவ்வளவு முக்கியமானது அல்ல என்பது உண்மையல்ல. தமது பிராந்திய ஆதிக்கவாதத்தை தொடர்வதற்காகவும் தமது நாட்டில் ஒரு பகுதியான தமிழகத்தின் அக்கறை காரணமாகவும் இந்திய மத்திய அரசாங்கம் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மீது பெரும் அக்கறை கொண்டுள்ளது என்பதே உண்மை.

- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையில்

### இலங்கையின் இறைமையை இந்தியா மதிக்கவேண்டும்

தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண இலங்கைக்கு உதவும் வேளை இந்தியா, இலங்கையின் இறைமையை மதிக்கவேண்டும். நீங்கள், இலங்கை அரசாங்கத்துடன் பேசலாம், ஆலோசனை கூறலாம் ஆனால், இப்படித்தான் நடக்கவேண்டும் என்று கூற முடியாது. இலங்கையும் இந்தியாவும் பரஸ்பரமற்ற வகையில் இறைமையை மதிக்கவேண்டும்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இலங்கையின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின் பின்னணியில் இந்தியாவும் இலங்கையும் மற்றவர் இறைமையை மதிக்கவேண்டும். இந்தியப் பிரிவினைவாதிகளை அழைத்து, இலங்கை பேசினால் இந்தியரான எமக்கு எப்படியிருக்கும்.

நாம் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றக்கூடாது. ஆனால், இலங்கைப் பிரச்சினையை தீர்க்க உதவவேண்டும். நாம் பெரியண்ணனாக இருக்கக்கூடாது. இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்கக்கூடாது. ஆனால், எமது நிலைப்பாட்டை அவர்கள் விளங்கும் வகையில் தெளிவாக்க வேண்டும்.

13ஆவது திருத்தம் ஊடாக மாகாண சபைகளுக்கு அதிகார பகிர்வு செய்வதில் இதுவரை உண்டான முன்னேற்றத்தை நாம் பாராட்ட வேண்டும். அதிலிருந்து முன்னகர இலங்கைக்கு ஊக்கமளிக்கவேண்டும். தமிழர்கள் தாம் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதை மறந்து தம்மை ஸ்ரீலங்கன் என்று கருதவேண்டும்.

- ஆணைக்குழு ஆலோசகர்களின் ஒருவரான அவ்ரான் கௌசால்

### ராஜபக்சவிடம் பேசாமல் தீர்வு காண முடியாது

அதிபர் ஆட்சி முறையில் வல்லான் வகுப்பதே சட்டமாக இருக்கிறது என்பதுதான், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம். இலங்கையில் குடியரசுத் தலைவர் ஆட்சி முறைக்குப் பதிலாக இந்தியாவில் இருப்பதுபோலப் நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கு வழிகோலுவதுதான் இதற்கு நிரந்தரத் தீர்வாக இருக்கும். அப்போதுதான், எல்லா பகுதியினருக்கும் ஆட்சியில் பங்கு கிடைக்கும். நியாயமான, சமச்சீர் வளர்ச்சியும் உறுதிப்படும்.

அதேநேரத்தில், தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள், அதிபர் ராஜபக்சவுடன் பேசக்கூடாது, இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் போன்ற நடைமுறைக்கு ஒவ்வாத கோரிக்கைகளை முன்வைப்பது தவிர்க்கப்பட வேண்டும். அதிபர் ராஜபக்சவிடம் பேசாமலும், இலங்கை அரசின் ஒப்புதல் இல்லாமலும், ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதைக்கூட சிந்தித்துப் பார்க்க முடியாதவர்களாக நமது தமிழக அரசியல் தலைவர்கள் இருப்பது வேதனையாக இருக்கிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது முள்ளில் விழுந்திருக்கும் சேலை. சாதுரியமாகவும், எச்சரிக்கையாகவும் கையாள வேண்டிய பிரச்சினை இது. பிரதமர் நரேந்திர மோடியின் அணுகுமுறை நம்பிக்கை தருவதாக இருக்கிறது. அதை ஆதரிக்க முற்பட வேண்டுமே தவிர, பிரச்சினையை மேலும் அதிகரித்துவிடக் கூடாது.

- தி[illegible]னி தலையங்கத்தில்

### வரலாறு தெரியாதவர்கள் செய்யும் அரசியல் வியாபாரம்

அரசியலும் தெரியாமல், வரலாறும் தெரியாமல் தமிழ் மக்களின் பிரச்சினை பற்றி பேசுவதாக நினைத்துக் கொண்டு அரசியல் வியாபாரம் செய்யும் தம்பி யோகேஸ்வரன் போன்றவர்களால்தான் தமிழ் மக்களின் பிரச்சினை நீண்டு கொண்டே போகின்றது.

அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து செயற்பட்டு, அதன் மூலம் பிரச்சினை தீர்ந்து விட்டால் யோகேஸ்வரன் போன்றோருக்கு எதைச் சொல்லி மக்களிடம் பிரசாரம் செய்து அரசியல் வியாபாரம் செய்து பிழைப்பது என்ற பயத்தில் அனைத்து சக்திகளும் ஒன்று சேர்வதை தடுப்பதிலேயே குறியாக இருக்கின்றார்.

கூட்டமைப்பில் புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி இணைவதைக் கூட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கின்றோம் என "யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு பிரதேசவாதம்" பேசி மக்களை பிரித்து வைத்து அரசியல் செய்யும் யோகேஸ்வரனுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையாயினும் இவ்வாறான அரசியல் வியாபாரிகளிடம் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவே சில விடயங்களை கூற வேண்டியுள்ளது.

எந்த ஒரு தமிழ் பேசும் தரப்பையும் ஒதுக்கி வைத்து விட்டு தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்துவிடலாம் என்று நினைப்பது நடக்காத காரியம். ஆனால் யோகேஸ்வரன் போன்றோரின் பேச்சைக்கேட்டுக்கொண்டு இதைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது செய்து கொண்டிருக்கின்றது. இதன் மூலம் அவர்கள் எதனையும் சாதித்துவிட முடியாது என்பதனை கூறிவைக்க விரும்புகின்றேன்.

முள்ளிவாய்க்காலில் எல்லாவற்றையும் இழந்த எம் மக்களுக்குத்தான் தெரியும் அவர்களின் வலியும் வேதனையும். அதனை பார்த்த பின்பும் எமக்குள் ஒற்றுமையாக செயற்பட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களுக்குத் தெரியவில்லை.

- வீ. ஆனந்தசங்கரி அறிக்கையில்



# சொன்னார்கள்...

எதையும் வித்தியாசமாக செய்வேன் என்கிற பெயர் எனக்கு நிலைத்து விட்டது. ஆனாலும் கடந்த சில வருடங்களாக வெற்றிகள் கிடைக்காமலிருந்தேன். அந்த வேகம்தான் கதையே இல்லாமல் ஒரு படம் எடுக்கத் தூண்டியது. "கதை திரைக்கதை வசனம் இயக்கம்" படத்திற்கு கிடைத்திருக்கும் வரவேற்பு எனக்குக் கண்ணீரை வரவழைத்திருக்கிறது. வெற்றி கிட்டாத போது வரும் கண்ணீரைவிட, வெற்றிக்கு அருகில் நின்று அழுகிற தருணம் உன்னதமானது. அடுத்த படம் தயாராக இருக்கிறது. இதிலும் கதை இல்லை.

- பார்த்திபன்

நான் நிச்சயமாக நடிகர் சங்கத்தின் தலைவர் பொறுப்புக்கு வர மாட்டேன். தேர்தலில் போட்டியிடும் எண்ணமும் இல்லை. நடிகர் சங்கம் என்றாலே சீனியர்கள்தான் என்று சொல்லுகிறார்கள். இளம் தலைமுறைக்கும் இங்கே இடம் இருக்கிறது என்பதற்காகத்தான் வந்திருக்கிறேன். நடிகர் சங்கத்தின் வளர்ச்சிக்காக நான், கார்த்தி, ஜீவா, ஆர்யா என எல்லோரும் இணைந்து ஒரு படத்தில் நடித்து அந்த வருமானத்தை சங்கத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். இந்தத் திட்டத்தில் ரஜினி, கமல், அஜித், விஜய், விக்ரம், சூர்யா என சீனியர்களையும் பங்கேற்கும்படி கேட்க இருக்கிறோம்.

- நடிகர் சங்கக் கூட்டத்தில் விஷால்

"பாண்டிய நாடு" படத்துக்காக நான் பாடிய "..பை பை.." பாடல் குழந்தைகள் மட்டுமில்லாமல் பல தரப்பிலும் பரவலான வரவேற்பைப் பெற்றது எனக்குப் பெரிய சந்தோஷம். இப்போது "கதம் கதம்" என்ற படத்துக்காக மீண்டும் ஒரு பாடலைப் பாடியிருக்கிறேன். தலைமுறை தலைமுறையாக நாம் கேட்டு வரும் பாட்டி வடை சுட்ட கதைதான் ஆங்கிலம் கலந்த தமிழில் பாடலாக எழுதப்பட்டுள்ளது. இந்தப் பாடலும் எல்லோருக்கும் பிடிக்கும்.

- ரம்யா நம்பீசன்

"ஆயிரத்தில் ஒருவன்" பிரம்மாண்ட படைப்பு. எல்லா இடங்களிலும் கவனம் வைத்துதான் செய்தார் செல்வராகவன். எந்த இடத்தில் எது மிஸ் ஆனது? என்பது இன்று வரை எனக்குத் தெரியவில்லை.

ஆனால், இப்போது பார்த்தாலும் அப்படியிருக்கும் படம். ராதாமோகன் உறவுகளின் உன்னதத்தை எடுத்து வைக்கும் நுணுக்கம் தெரிந்தவர். விஜியின் வசன ஆளுமை - ராதாமோகனின் இயக்கம் இந்த இணைப்பில் வேலை பார்த்துக் கொண்டே இருக்கலாம். கற்றுக் கொள்ள அவ்வளவு சங்கதிகள் இருக்கும். சிம்புதேவனுடன் "இம்சை அரசன்" படத்தில் வேலை பார்த்தேன். வாழ்நாள் முழுவதுமான பயணத்துக்கு இந்த மூவரின் பங்களிப்பே எனக்கு ஆதாரம்.

- 'கபடம்' பட இயக்குநர் ஜோதிமுருகன்

கூட்டுக் குடும்பமாக வளர்ந்ததால் எனக்கு சிறுவயதிலிருந்தே பந்தம், பாசம், என உறவுகள் மீது பற்று இருந்தது. அந்தப் பற்று இப்போதும் தொடர்கிறது. இப்பவெல்லாம் கணவன், மனைவி சேர்ந்து வாழ்ந்தாலே கூட்டுக் குடும்பம் தான் என்று சொல்லும் அளவுக்கு ஆகிவிட்டது.

நாம் நிஜமாக வாழவில்லை. வாழ்வதைப் போல் நடிக்கிறோம். நமது பண்பாட்டை குழந்தைகளுக்குப் புரிய வைக்கவே விழாக்களைக் கொண்டாடுகிறோம். நமக்கு கிடைக்கும் விடுமுறை மற்றும் ஓய்வு நாட்களை நமது உறவினர்களுடன் கொண்டாடினால் தான் உண்மையான ஆனந்தமாக இருக்க முடியும்.

ஆனால் இப்போ நாம் எங்கே ஓடுகிறோம் எதுக்கு ஓடுறோம் என்றே தெரியாமல் ஓடிக்கொண்டு இருக்கிறோம். குழந்தைகள் கார்டூன் சனல், ஹொட்டல் என்று தனிமைப்படுத்தப்படுகிறார்கள். அதனால் வாழ்க்கை என்று வரும்போது சின்னச் சின்ன விஷயங்களைக்கூட பெரிய பிரச்சினையாக்கிக் கொள்கிறார்கள்.

- கிரேஸி மோகன்

இரவு வானில் நம்மால் ஒரு

ஆதில் நியாயம் இருந்த … உதவவேண்டும். நாம் பெரியண்ணை … - தினமுரசு தலையங்கத்தில் … - வீ. ஆனந்தசங்கரி அறிக்கையில் … தலைமுறையாக நாம் கேட்டு … - கிரேஸி மோகன்

# பெண்களே எச்சரிக்கை!



சொந்தக்காரர், அலுவலகத்தில் உடன் பணியாற்றுவோர், ஒன்றாகப் படிக்கிறவர் என, பல விதங்களில், ஆண்களுடன் இன்றைய பெண்கள் பழக நேரிடுகிறது. அப்போது, "ஆகா... இவர் நமக்கு ஏற்ற இலட்சியக் கணவராகத் திகழ்வார்..." என்று, சிலரைப் பற்றிய எண்ணங்களை பெண்கள் தம் மனதில் வளர்த்துக் கொள்ளக் கூடும் அது. தப்பில்லை!

ஆண்களை வகைப்படுத்தி, "உஷார்!" என்று எச்சரிக்கிறது, ஒரு ஆங்கிலப் பத்திரிகை. இன்னின்னாரை நம்பி ஏமாறாதீர்கள் என்று அது தந்துள்ள பட்டியல் இதோ:

**திருமண சோம்பேறி!**

இத்தகைய நபர்கள் காலையில் எழுந்து பல் விளக்க எவ்வளவு சோம்பல் படுவரோ அதே அளவுக்கு, கல்யாண விஷயத்திலும் சோம்பேறித்தனமாக இருப்பர். "படிப்பு முடியட்டும்... வேலை கிடைக்கட்டும்... புறமோஷன் கிடைக்கட்டும்... தங்கச்சிக்கு திருமணம் ஆகட்டும்..." என்று, திருமணத்தைத் தள்ளிப் போட்டுக்கொண்டே இருப்பார். இவரை நம்பினால், உங்கள் திருமணத்தையும், மணிவிழா வையும் ஒன்றாக நடாத்த வேண்டி இருக்கும்!

**சிக்கன சிங்காரம்!**

ஒரு முறை உங்களை வெளியே அழைத்துச் சென்று திரும்பி வந்தவுடனே, என்னென்ன செலவாயிற்று என்று கணக்கு எழுதுகிறவர் இவர். இவரிடம், ஒரு மைல் தள்ளி நில்லுங்கள் இதே போல நோட்டு நோட்டாக பறக்க விடுகிறவரிடமும் எச்சரிக்கை தேவை. ஒரு நாள் உங்களையே பறக்க விட்டு விடுவார் இவர்.

**புத்தகப் புழு!**

ஏராளமாக படிப்பவர், அறிவு ஜீவி: ஆனால், பெண் மனம் இவருக்குப் புரியாது! புரிந்தாலும் கவலைப்பட மாட்டார்.

**"தேக" பக்தர்!**

"சாப்பிடப் போகிறாயா... அதற்கு முன், இந்த மாத்திரையை போட்டுக் கொள்ளும்படி டாக்டர் சொன்னாரே... ஞாபகம் இல்லையா? டைரியில் கூட குறித்து வைத்திருக்கிறேன்..." என்று பதறுவார். எப்போதும் பயம், படபடப்பு. உங்களுக்கு தலைவலி வந்தால், அவருக்கு நெஞ்சுவலி வந்து விடும். இவரை திருத்துவது நன்று! துறப்பது அதனினும் நன்று!

**சாப்பாட்டு ராமன்!**

அடிக்கடி உங்கள் வீட்டு சமையலில் எதையாவது ருசி பார்த்தபடி இருக்கிறாரா? ஜாக்கிரதை! கல்யாணத்துக்குப் பிறகும், இவர் சமையலறையை விட்டுக் கிளம்ப மாட்டார்!

**பொழுது போக்காளர்!**

இவருக்குத் தேவை, ஒரு சினேகிதி தான் மனைவி அல்ல!

**மிஸ்டர் நாகரிகன்!**

"அது பண்பாடில்லை! இது, ".'.பாஷன்" இல்லை. அப்படி சிரிக்காதே, இப்படிப் பேசாதே..." என்று அடிக்கடி உபதேசம் செய்து, உங்களை திருத்திக் கொண்டே இருப்பார். இவருடன் வாழ்வது கொடிதினும் கொடிது!

இப்படி எச்சரிக்கை செய்து இருக்கிறது அந்தப் பத்திரிகை. இன்னும் திருமணமாகாத பெண்களுக்கு, இந்த எச்சரிக்கை பெரிதும் உதவியாக இருக்கும் என நினைக்கிறோம்.

சரி... பெண்களுக்கு எச்சரிக்கை விட்டு எழுதியிருப்பது போல, எந்த வகையான பெண்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்? எவ்வகையான பெண்களுடன் திருமண பந்தம் வைத்துக் கொள்ளக் கூடாது என, ஆண்களுக்கு அறிவுரை ஏதும், அந்தப் பத்திரிகையில் எழுதப் பட்டுள்ளதா என்று பார்த்தால்... ம் ஹூம்... ஒன்றும்

# "பழுப்புக் குள்ளன்"


**- என்.ராமதுரை -**

சூரிய மண்டலத்தின் எல்லைக்கு அப்பால் மேலும் ஒரு "பழுப்புக் குள்ளன்" (Brown Dwarf) இருப்பதை விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். அதென்ன பழுப்புக் குள்ளன்? நிச்சயம் அது மனிதன் இல்லை. அது ஒரு நட்சத்திரமா? இல்லை. அது ஒரு கிரகமா? அதுவும் இல்லை. அப்படியானால் அது தான் என்ன?

நிலவற்ற நாளில் இரவில் வானைப் பார்த்தால் எண்ணற்ற நட்சத்திரங்கள் தெரிகின்றன. பல நூறு கோடி கிலோ மீற்றருக்கு அப்பாலிருந்து நமது சூரியனைப் பார்த்தால் சூரியனும் ஒளிப்புள்ளியாக அதாவது நட்சத்திரமாகத்தான் தெரியும். சூரியன் மற்ற நட்சத்திரங்களைப் போல ஒரு நட்சத்திரமே.

சூரியனை பூமி உட்பட பல கிரகங்கள் சுற்றி வருகின்றன. இரவு வானில் நாம் காணும் நட்சத்திரங்களும் இதே போல கிரகங்களைப் பெற்றிருக்கலாம்.


சூரியனும் மற்ற நட்சத்திரங்களும் ஒரு வகையில் நெருப்பு உருண்டைகளே. கிரகங்கள் அப்படி இல்லை. ஒரு கிரகம் என்பது பூமி போல மண், கல், பாறை ஆகியவற்றால் ஆனதாக இருக்கலாம். அல்லது வியாழன் போல



பனிக்கட்டி உருண்டையாக இருக்கலாம். ஆனால் கிரகங்கள் சுயமாக ஒளி விடுபவை அல்ல.

இரவு வானில் நம்மால் ஒரு கிரகத்தை ஒளிப்புள்ளியாகக் காண முடிகிறது என்றால் சூரியனின் ஒளி அதன் மீது விழுவதே காரணமாகும்.

நட்சத்திரமாகவும் இல்லாமல் கிரகமாகவும் இல்லாமல் ஒன்று இருக்க முடியுமா? பழுப்புக்




குள்ளன் அப்படிப்பட்டதே. நட்சத்திரமாக உருப்பெறாமல் போன பெரிய உருண்டைகளைத் தான் விஞ்ஞானிகள் பழுப்புக் குள்ளன் என்று குறிப்பிடுகிறார்கள்

விஞ்ஞானிகள் இப்போது கண்டுபிடித்துள்ள பழுப்புக் குள்ளனுக்குத் தனிப் பெயர் வைக்கப்படவில்லை. அது WISE J085510.83-07 1442.5 என்ற நீண்ட எண் கொண்டு குறிப்பிடப்படுகிறது.

இந்த வைஸ் பழுப்புக் குள்ளன் நமது வியாழன் கிரகத்தை விட மூன்று முதல் பத்து மடங்கு எடை கொண்டது. வியாழன் கிரகமோ பூமியை விட 317 மடங்கு அதிக எடை கொண்டது. ஆகவே அந்த பழுப்புக் குள்ளன் ராட்சத பனி உருண்டை தான்.

வைஸ் பழுப்புக் குள்ளன் மட்டும் வியாழன் கிரகத்தைப் போல 90 மடங்கு அதிக எடை கொண்டதாக இருந்திருக்குமானால் அது நட்சத்திரமாக மாறியிருக்கும்.

பழுப்புக் குள்ளன் கண்டுபிடிக்கப்படுவது இது முதல் தடவையல்ல. இதுவரை 1800 இற்கும் மேற்பட்ட பழுப்புக் குள்ளன்கள் அண்டவெளியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இப்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ள பழுப்புக் குள்ளன் பற்றிய ஒரே விசேஷம் அது கடும் குளிர் வீசுவதாகும். அதாவது இதன் மேற்புறம் மைனஸ் 48 பாகை முதல் மைனஸ் 13 பாகை செல்சியஸ் அளவுக்கு உள்ளது.

பழுப்புக் குள்ளன்கள் உண்மையில் பழுப்பு நிறம் கொண்டவை அல்ல. ஏதோ ஒரு பெயர் வைக்க வேண்டுமே என்பதற்காக பழுப்புக் குள்ளன் என்று பெயர் வைக்கப்பட்டது.

# முன்பே சொல்லியிருக்கக் கூடாதா?

ஒரு பாலைவனத்தில் இருவர் ஒட்டகத்தில் போய்க் கொண்டிருந்தனர்.

சிறிது களைப்பு வரவும் இருவரும் ஓர் ஓரமாக சாய்ந்து ஓய்வெடுத்துக் கொண்டனர்.

திடீரென்று ஒட்டக ஓட்டியை மற்றவர் படாதபாடு படுத்துகிறார். அவரை உருட்டிப் பிரட்டிக் காலை இழுத்து, தலையை அசைத்து, இப்படிச் செய்யும் போது ஒட்டக ஓட்டிக்குக் கோபம் வந்தது.

ஏன் என்னை நீ இந்தப்பாடு படுத்துகிறாய்? என்று கேட்டார் ஒட்டக ஓட்டி.

அதற்கு அவர், "நீ கொஞ்சம் நேரம் சும்மா இரு" என்று சொல்லிவிட்டு, அவர் வேலையையே பார்த்தார்.

சிறிது நேரத்தில் ஒட்டக ஓட்டியின் வாயிலிருந்து சிறிய பாம்பு ஒன்று வெளியில் வந்து விழுந்தது.

இதைப் பார்த்ததும் ஒட்டக ஓட்டி பயந்து போனார்.

அப்போது ஒட்டக ஓட்டியுடன் வந்தவர், "நீ சற்று நேரம் வாயைத் திறந்து கொண்டே தூங்கிவிட்டாய் உன் வாயில் இந்தக் குட்டிப்பாம்பு சென்றுவிட்டது அதை எடுத்துவிடவே உன்னை இந்தப்பாடு படுத்தினேன்" என்று சொன்னார்.

"பாம்பு என் வாயிலிருந்து வந்தபின் சொல்கிறீரே... ஏன் இதை முன்பே சொல்லியிருக்கக் கூடாதா?" என்றார் ஒட்டக ஓட்டி.

அதற்கு அவர், "நான் முன்பே உன் வாய்க்குள் பாம்பு சென்றுவிட்டது என்று சொல்லியிருந்தால்... நீ அந்தப் பயத்திலேயே செத்துப் போயிருப்பாய்" என்று கூறினார்.

பாம்பு கடித்து இறப்பவர்களை விட பாம்பு கடித்து விட்டது என்று பயத்தில் இறப்பவர்களே அதிகம்.



# பிரதேச அபிவிருத்தியை எட்டுவதற்கு அலுவலர்களின் அர்ப்பணிப்பு அவசியம்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



(பூநகரி)

பூநகரிப்பிரதேசத்தின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் உழைத்த பிரதேச செயலக அலுவலர்களின் சேவை பாராட்டுக்குரியது என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

பூநகரி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அலுவலர்களை அண்மையில் சந்தித்து கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுளார்

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்

பூநகரி பிரதேச செயலர் பிரிவானது ஓப்பீட்டளவில் மிகப் பரந்த நிலப்பரப்பு ஆனால் இங்கு வாழ்கின்ற மக்கள் தொகை வெறும் ஏழாயிரம் மட்டுமே.

ஆயினும் இப்பிரதேசத்தின் அபிவிருத்தி செயற்பாடுகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்களின் தேவைகள் பகுதி பகுதியாக ஆராயப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டும் வருகின்றன. மீள்குடியேற்றத்தின் பின்னர் இன்றுவரைதொடரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களினூடாக மக்களின் பல முதன்மைத்தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் நடைபெற்றுவரும் அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்களில் எண்பது விகிதமான நிதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கூடாகவே வழங்கப்படுகின்றது. அந்த நிதி ஒதுக்கீடுகளானது எமது பிரதேசங்களைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானதாகவும் அவசியமானதாகவுமே அமைந்துள்ளன. உள்ளூராட்சி மன்றங்கள் தொடக்கம் அனைத்து திணைக்களங்கள் சார்ந்த செயற்பாடுகளுக்கும் அவ்வமைச்சினுடாகவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதிகள் எமது பிரதேசங்களுக்கு விசேட அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன. இருப்பினும் எமது மக்களின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டுமாயின் தொடந்தும் நாம் மிகப் பெருந்தொயையான நிதியை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

இவை அனைத்திற்கும் அப்பால் இந்தப்பரந்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி செயற்பாடுகள் பயனுள்ளவையாகவும். வேலைத்திட்டங்களின் இலக்கை எட்டுவதற்கும் மிகக் கடுமையான உழைப்பைச் செலுத்திய பிரதேச செயலகத்தின் ஊழியர்கள் அதிகாரிகள் கிராம சேவையாளர்கள் ஆகியோரின் அயராத உழைப்பும் முதன்மை பெறுகின்றது. அந்தவகையில் அவர்களுக்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிதுக்கொள்கின்றேன் என குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களுக்காக பாடுபட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பூநகரி பிரதேச செயலர் சத்தியசீலனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பூநகரிப்பிரதேசசபையின் செயலாளர் மேரிமெற்றலின் பூநகரி வைத்தியசாலையின் வைத்தியர் றொபின்சன் மற்றும் கிராம சேவையாளர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வெளிக்கள அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## டிப்ளோமா பட்டதாரிகள் நியமனம் கோரி மகஜர்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் வேலையற்ற பட்டதாரிகள் 670 பேர் தமக்கு வேலை வாய்ப்பு வழங்குமாறு கோரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மகஜர் மூலம் கோரியுள்ளனர். வேலையற்ற பட்டதாரி மற்றும் உயர்தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் இணைந்து கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2011 இற்குப் பின்னர் வேலையற்றவர்களுக்கு அரச நியமனம் வழங்கப்படவில்லை. எனவே இவ்வாண்டுக்குள் எமது வடமாகாணத்தில் வேலையற்ற நிலையில் உள்ள பட்டதாரிகள், உயர்தேசிய டிப்ளோமா பட்டதாரிகளின் விபரங்களை மாவட்ட ரீதியாக தொகுத்து பட்டத்தின் மூப்பின் அடிப்படையில் நியமனம் வழங்குமாறு கோரியுள்ளனர்.

இந்த மகஜரின் பிரதி,அமைசசர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (92)

## "யோகா ஓர் அறிமுகம்" விசேட அறிமுகவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோகா அரங்கத்தினர் நடாத்தும் யோகா பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு நல்லூர் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30மணிக்கு யோகா அரங்க இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த திருமதி. சாவித்திரி ரவிச்சந்திரன் 'யோகா ஓர் அறிமுகம்'என்னும் தொனிப்பொருளில விசேட உரையை நிகழ்த்துவார். யோகா வகுப்புக்கள் காலை 6.00 மணி தொடக்கம் 7.00மணிவரையாக அறுபதுநாட்கள் தினமும் நடைபெறும். மாலைநேர வகுப்புக்களும் விரைவில் ஆரம்பிக்கப்படும். ஆரோக்கியத்திற்கு அவசியமான ஆசனம், பிராணயாமம், தியானம், மற்றும் யோகாசார்ந்த வழிமுறைப் பயிற்சிகள் அனுபவமுள்ள ஆசிரியர்களால் நுட்பமாக பயிற்றுவிக்கப்படுவதுடன் கையேடுகளும் யோகாசன செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு சர்வதேச யோகா நிறுவனம் ஒன்றிலிருந்து சான்றிதழ்களும் பெற்றுக்கொடுக்கப்படும் ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து பயன்பெற முடியுமென்று யாழ் யோகா அரங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

## முதியோர் வினாவிடைப் போட்டி கரைச்சி பிரதேச செயலக அணி முதலிடம்

சமூக சேவைகள் அமைச்சின் நிதி அனுசரணையில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதியோர் வினாவிடைப் போட்டி நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போது முதலாமிடத்தை கரைச்சி பிரதேச செயலக அணி பெற்றுக்கொண்டது.

முதியோர் வினாடி வினாப் போட்டியில் இரண்டாம் இடத்தை பளை பிரதேச செயலர் பிரிவும், மூன்றாமிடத்தை பூநகரி பிரதேச செயலகப் பிரிவும் பெற்றுக் கொண்டன.

மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்ற கரைச்சி பிரதேச செயலகப் பிரிவு தேசிய மட்டப் போட்டிகளில் விரைவில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)

## வீடு வழங்கும் நிகழ்வு

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தால் தமது அங்கத்தவர்களில் வீடற்றவர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடு கையளிப்பு நிகழ்வு இன்று மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சரஸ்வதி சனசமூக நிலைய தலைவர் லயன் ப.செல்லத்துரை தலைமையில் கைதடி மேற்கு உதயநகரில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி சிறிநிதி நந்தசேகரம் கலந்து கொள்ளவுள்ளார். (90)

## நடைபாதை பயணிகள் தொடர்பில் கவனம் செலுத்த கோரிக்கை

வீதிகளில் பாதசாரிகள் கடவைகள் போடப்பட்டிருக்கும் நிலையில் அந்தப்பாதையூடாகச் செல்லும் பயணிகளுக்கு வாகனங்களை ஓட்டுவோர் தரித்து நின்று வழி விடுவதில்லையென விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பிரதான வீதி, ஏ9 வீதி, போன்ற வானங்கள் அதிகாமாகச் செல்லும் வீதிகளில் உள்ள பாதசாரிகள் கடவைகளில் நின்று பயணிகளை வீதியைக் கடக்க அனுமதி வழங்காது பயணங்களை மேற்கொள்வதுடன் கடவையைக் கடந்து செல்லும் பயணிகளுக்கு அருகால் வாகனங்களை நகர்த்திச் செல்வதால் பயணிகள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுப்பதுடன் விபத்துக்களும் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தற்போது யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள வாகனங்களின் போக்குவரத்துக்களுக்கு மத்தியில் எமது இளைஞர் யுவதிகள் தமது வாகனங்களை விமானங்கள் போல் அதிவேகமாக செலுத்திவருவதால் நடைபாதை பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக கவலை தெரிவித்துள்ளனர். மேலும் பாதசாரிகள் கடவையில் பயணிகள் கடக்கும் போது வாகனங்களைச் செலுத்துவோர் தமது வாகனங்களை நிறுத்தாது விரைவில் கடக்குமாறு பயணிகளை கண்டிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே நடைபாதை பயணிகளின் நலனில் யாழ். போக்குவரத்து பொலிஸார் அதிக கவனம் செலுத்தவேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (51)





சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி-1 இற்கான மாவட்ட உப ஆளுநருக்கான தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட வைத்திய கலாநிதி வை.தியாகராசா கோப்பாய் மக்களால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட போது... (08)

# கலை கலாசாரம் பாதுகாக்கப்பட்டு எதிர்கால சந்ததிக்கும் வழங்க வேண்டும்

## சத்தியசீலன் தெரிவிப்பு

தமிழ், கலை, கலாசாரம், பண்பாடுகள் பேணிப்பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டு எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கப்பட வேண்டும் அத்துடன் கலைஞர்கள், சாதனையாளர்கள் கௌரவிக்கப்படவேண்டும் எனவே இன்று நடைபெறும் இப்பண்பாட்டுப் பெருவிழா மிக முக்கியம் வாய்ந்த ஒன்றாகவே அமைகின்றது என வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை சிவன்ஆலய கலாசார மண்டபத்தில் பிரதேச கலாசார பேரவைத்தலைவர் ஆர்.வி.ஜெயசீலன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற பருத்தித்துறை பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவிலும், பிரதேச மலர் வெளியீட்டிலும் கலைப் பரிதி விருது வழங்கும் நிகழ்விலும் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டுஉரையாற்றிய வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர்விவகார அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பகுதிக்கும் கலாசார அபிவிருத்திக்கென கலாசார திணைக்களம் தலா 5 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது. கலாசார பேரவையின் அனுசரணையுடன் திட்டங்கள் தீட்டப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இதன்மூலமே அவ்வப்பிரதேசங்களின் கலை கலாசார பண்பாட்டு நடவடிக்கைகள் எழுச்சிபெற முடியும். அதுமட்டுமன்றி பிரதேச கலைஞர்கள், சாதனையாளர்கள் பாராட்டிக்கௌரவிக்கப்படவேண்டும் இது கலை, கலாசார, பண்பாட்டு வளர்ச்சிகளுக்கு வழிவகுக்கும். அத்தோடு இந் நாட்டிற்காகச் சேவைகளை வழங்கி ஓய்வு பெற்றுள்ள அரச உத்தியோகத்தர்களும் கலாசாரப் பேரவையில் இணைத்துக் கொள்ளப்படவேண்டும் என்றார். (01)

# புளியங்குளம் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



வவுனியா பட்டாணிச்சூர் புளியங்குள பிரிவிலுள்ள வறிய மாணவர்களுக்கு நேற்று முன்தினம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக இளந் [..]ளிர் கல்வி அறக்கட்டளை நிறு[..]வனம் வழங்கிய ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வவுனியா வேப்பங்குளத்தில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கி கட்டடத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் பட்டாணிச்சூர் புளியங்குள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ரமேஷ், தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா பிரதேச செயலக கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் திருமதி. சா.சந்திரகுமார், வேப்பங்குளம் சமுர்த்தி வங்கி சங்க முகாமையாளர் செல்வி ப.ஞானகி, முன்னாள் நகரசபை உறுப்பினரும், வணிக கைத்தொழில் அமைச்சின் வவுனியா மாவட்ட இணைபபாளருமான அப்துல் பாரி, முன்னாள் நகரசபை உறுப்பினரும், நீதி அமைச்சின் வவுனியா மாவட்ட இணைப்பாளருமான முனாபார், தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் பா.ஜோர்ச், வேப்பங்குளம் வங்கி சங்க தலைவர் அ.அ,ஜருஸ் இவர்களுடன் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் சந்திரகுமார்(கண்ணன்).கலைஞர் மாணிக்கம் ஜெகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (70)

# போசாக்கு நிறைந்த ஒரு தேசம் விழிப்புணர்வு செயலமர்வு


'நாட்டிற்கு வெற்றி போசாக்கு நிறைந்த ஒரு தேசம் தொலை நோக்கு 2016 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். பொதுநூலகத்தில் நடைபெற்றது.

தேசிய போசாக்கு செயலகம் மற்றும் ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறி கலந்து கொண்டார்.

அத்துடன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் மற்றும் கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா, வடமாகாண பிரதம செயலாளர் ரமேஸ் விஜயலக்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

'நாட்டிற்கு வெற்றி போசாக்கு நிறைந்த ஒரு தேசம் தொலை நோக்கு 2016' எனும் தொனிப் பொருளில் போசாக்கிற்கான பன்முக செயற்பாட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தலும், திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அறிமுகத்தை தேசிய போசாக்கு ஒருங்கிணைபபாளர் லலித் சந்திரதாஸ"ம் இலங்கையின் தற்போது போசாக்கு நிலைமையினையும், உலக போசாக்கு நிலமையினையும் ஒப்பீடு செய்தலும், ஒவ்வொரு நாடும் மேற்கொண்ட வெற்றிகரமான திட்டங்கள் எடுத்துக் காட்டலும், போசாக்கு தொடர்பான நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸவும் இலங்கையின் தற்போது போசாக்கு நிலமையுடன் ஒப்பிடுகையில், வடமாகாணத்தில் போசாக்கு நிலமை மற்றும் நாம் எதிர்நோக்கியுள்ள போசாக்கு அபாயம், சவால்கள் என்பவற்றை வெற்றி கொள்வதற்கு தற்போது அமுலிலுள்ள போசாக்கு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக வடமாகாண சுகாதார பணிப்பாளர் எஸ். ஆர்.யூட் ஆகியோரும் கருத்துரைகள் வழங்கியுள்ளனர்.

இவ்விழிப்புணர்வு செயலமர்வில், வடமாகாண வைத்தியர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (25)



மண்டைதீவு சந்தியில் அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட புனிதபேதுருவானவர் திருச்சொருப சிலையைக் காணலாம்...(51)

# பதிவிறக்கப் பெட்டகம்

இதைச் செய், அதைச் செய் என்று அவர்கள் எப்போதும் கவிஞர்களிடம் இரைந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கவிஞன், தான் எது தேவையென்று கருதுகிறானோ அதைப் பற்றிப் பேசுவதுதான் அவசியமானது.

இங்கு பேசிய சிலர் கவிதைகளை நல்லவை என்றும் கெட்டவை என்றும் கறாராகப் பாகுபடுத்தினர். அவை ஏதோ இயந்திரத்தின் நல்ல பாகங்கள் பழுதுபட்ட பாகங்கள் என்பது போல்... இயந்திரத்தை அதிகரித்த அளவில் பயன்படுத்துவதனால் நமக்கு விமோசனம் கிட்டப்போவதில்லை. ஆபத்துகளை மேற்கொள்ளாமலும் சுயதியாகத்தைச் செய்யாமலும் கலை என்பதை சிந்தித்துப் பார்க்கவே முடியாது. சுதந்திரமும் கற்பனையின் துணிச்சலும் நடைமுறையிலேயே சாதிக்கப்பட வேண்டும். இங்கு நாம் எதிர்பாராதவற்றை எதிர்பார்க்க வேண்டும். சாலையில் வழிகாட்டுதல்களுக்காகக் காத்திருக்க வேண்டாம்.

எழுத்தாளர்களுக்கு ஆணை பிறப்பிக்கக் கூடாது. ஒரு பெண்குழந்தையைப் பெற்றுக்கொடு; ஆண் மகவையல்ல என்று தாயிடம் கூறமுடியாது.

சோவியத் நாட்டிற்கு எதிராக மேற்கு நாடுகள் செய்த சூழ்ச்சிகள், நம் நாட்டின் பொருளாதார மறுகட்டமைப்பு பற்றி கேட்கிறீர்கள். இவை இரண்டும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற போதிலும் ஒரு கவிஞன் என்கிற முறையில் எனக்கு நன்கு தெரிந்தவை எவையோ அவற்றைப் பற்றிச் சொல்லவே விரும்புகிறேன். ஒரு கலைஞனுக்கு எப்போதும் இன்றியமையாதவை எவையோ அவை பற்றியே சொல்ல விரும்புகிறேன். அதாவது மனித நெஞ்சில் நடைபெறும் போராட்டங்கள், மனித இதயங்களில் இடைவிடாது மாறி வரும் உணர்ச்சிகள், மனித மனங்களில் உள்ள நம்பிக்கைகள் ஆகியனவே அவை.

**– போரிஸ் பாஸ்டர்நாக்**

எழுத்தாளனை நீ புரிந்துகொள். அவனுக்கு அறிந்தும் பொய் சொல்வது அவசியமாய் இருக்கிறது. இந்த நிலையற்ற வாழ்வில் தன் நிலையை காப்பாற்றிக்கொள்ள அவன் எந்த ஒரு ஆத்ம கிருதியையும் செய்யத் தயங்கமாட்டன். **– நகுலன்**

கவிஞன் பொருந்திப் போகாதவன், அவன் உண்மையான கவிஞன் எனில். அத்துடன் அவன் தன் வாசகர்களையும் பொருந்திப் போகாதவர்களாக ஆக்குவதில் சந்தோஷம் அடைகிறான். ஒவ்வொரு முறை ஒரு கவிஞன் எழுதும் போதும் பொருந்திப் போகாதவர்களின் சமூகத்தை விரித்துக்கொண்டே போகிறான். உயிர் வாழ்வதற்காக ஒட்டி ஒழுகுபவர்களின் சமூகத்தில், கவிதை நின்று நிலைக்க, வேறு மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை. **– ரெகுவீர் சஹாய்**

சமூகம் தற்போது தருகிற சௌகரியமான இருக்கைகளில் அமர்ந்து கொண்டே புரட்சி, சீர்திருத்தம் பேசுகிறவர்களால் தான் சமூகமாறுதல் சாத்தியமற்றுப் போய்க்கொண்டேயிருக்கிறது. இந்தச் சமூகப் பிரச்சினையே, தன் சொந்தப் பிரச்சினையாகவும் ஒருவனால் உணரப்படுகையில்தான் அவனிடமிருந்து அரசியல் கவிதைகளும் பிறக்கின்றன.


**– தேவதேவன்**

சிறுகதை எழுத எத்தனையோ பேர்வழிகள் சொல்லியிருக்கிறார்கள். வகுப்புக்கூட நடத்துகிறார்கள். தபால் ட்யூஷன்கூட நடத்துவதாகக் கேள்வி. என்ன நடத்தினாலும் உத்திகளைத தான் சொல்லிக்கொடுக்கலாம். உணர்வில் தோய்வதைச் சொல்லிக் கொடுக்க முடியாது. உணர்வில் லயிப்பதையும் முறுக்கேறுவதையும் சொல்லிக் கொடுக்க முடியாது. ஆனால் உத்திகளைச் சரியாகக் கையாண்டு, இலக்கண ரீதியாகப் பழுதில்லாத ஆயிரம் சிறுகதைகள் இப்பொழுது நம் நாட்டிலும் அயல் நாடுகளிலும் பல பத்திரிகைகளில் வருகின்றன. ஆனால் நாவலோ, நாடகமோ எழுதும் ஆசிரியர்களின் எண்ணிக்கையில் நூற்றில் ஒரு பங்குகூட அசல் சிறுகதை ஆசிரியர்கள் இந்த உலகத்தில் இல்லை. இதுதான் வேடிக்கை. உத்திகளைத் தெரிந்து கொண்டு மட்டும் சிறுகதைகள் எழுதி, பத்திரிகைகளை நிரப்பலாம். அது ஒன்றும் பெரிய காரியமில்லை. செக்காவின் உத்திக்கு ஓர் அச்சு தயார் செய்துகொண்டு அதில் நம் சரக்கைப் போட்டு வார்த்துவிடலாம். ஆனால் அது செக்காவ் அச்சின் வார்ப்பாகத்தான் இருக்கும். புதிதாக ஒன்றும் வந்துவிடாது. உணர்வும் நம் பார்வையின் தனித்தன்மையும்தான் முக்கியம். அவை கண்ணியமாகவும் தீவிரமாகவும் இருந்தால் நமக்கு என்று ஓர் உருவம் கிடைக்கும். இதை எப்படிச் சொல்லிக் கொடுக்கப் போகிறார்கள்?

**– தி.ஜானகிராமன் (1969)**

# மேற்குலகின் அரசியல் தாற்பரியம் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு புரியாது

## வெறுப்புடன் பேசுகிறார் திஸ்ஸ



(கொழும்பு)

மேற்குலகின் அரசியல் தாற்பரியம் புரியாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவதாலேயே அவர்களின் செயற்பாடுகளை நாம் எதிர்க்க வேண்டியுள்ளது என்று அமைச்சர் திஸ்ஸவிதாரண தெரிவித்தார்.

நாட்டில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதே அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் தேவையாகவுள்ளது. இதன் தாற்பரியத்தை புரிந்துகொள்ளாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கா ஊடாக தமது தேவைகளை நிறைவேற்ற முயற்சிக்கின்றது என்று அமைச்சரும் முன்னாள் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா தலையிட்டால் அது இங்குள்ள அனைத்து மக்களையும் பாதிக்கும் என்பதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்துகொள்ளவேண்டும் என்றும் அவர் கூறினார்.

பதவி விலகிச் செல்லும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கை விடயத்தில் பக்கச் சார்பாகவே செயற்பட்டுள்ளார். அமெரிக்கா மற்றும் புலம் பெயர் மக்களின் தேவைக்காகவே அவர் இவ்வாறு செயற்பட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை பதவி விலகிச் செல்கின்றமை மற்றும் கூட்டமைப்பின் இந்திய விஜயம் என்பன குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இந்த விடயம் குறித்து மேலும் கூறுகையில் பதவி விலகிச் செல்லும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கை விவகாரத்தில் மிக அதிகளவில் பக்கச்சார்பாக நடந்துகொண்டார். குறிப்பாக அமெரிக்காவினதும் புலம்பெயர் மக்களினதும் தேவையை நிறைவேற்றும் நோக்கில் அவர் செயற்பட்டுள்ளார்.

குறிப்பாக இலங்கை விவகாரம் குறித்து நவநீதம் பிள்ளை வெளியிட்ட அறிக்கையில் இருந்த விடயங்கள் தருஷ்மன் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களாகும். தருஷ்மன் அறிக்கையின் விடயங்களையே நவநீதம்பிள்ளை தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தமை அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

இலங்கை விவகாரம் குறித்த விசாரணை செலவுக்கான நிதி மனித உரிமைப் பேரவையின் வரவு செலவுத்திட்டத்தில் இருக்கவில்லை. ஆனால் அந்த நிதியை வழங்குவதாக மேற்கு நாடுகள் உறுதியளித்தன. இதிலிருந்து சில நாடுகளின் தேவைக்கு ஏற்ப இவ்வாறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமை தெளிவாகின்றது.

மேலும் தனக்கு அடங்கிப் போகாத மற்றும் தனது பேச்சைக் கேட்காத நாடுகளின் அரசாங்கங்களை மாற்றியமைப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும். உலகின் சில நாடுகளில் அமெரிக்கா இவ்வாறு செயற்பட்டுள்ளது.

அந்தவகையில் இலங்கையிலும் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதே அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் நோக்கமாகவுள்ளது. இந்த தாற்பரியம் புரியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கா ஊடாக தமது தேவைகளை நிறைவேற்ற முயற்சிக்கின்றது. அதனால்தான் கூட்டமைப்பின் செயற்பாடுகளை நாங்கள் எதிர்க்கின்றோம்.

இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் தலையிட்டால் அது இங்குள்ள அனைத்து மக்களையும் பாதிக்கும் என்பதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்துகொள்ளவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக் கொள்ள உள்நாட்டுத் தரப்புடனேயே பேச்சு நடாத்தவேண்டும்.

அதற்காக தற்போது முன்வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவானது உரியமுறையில் செயற்படுத்தப்படவேண்டுமெ என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இதேவேளை கூட்டமைப்பினர் இந்தியாவுக்கு விஜயம் செய்து அந்நாட்டுத் தரப்பினரை சந்தித்தாலும் இந்தியா எந்தக் கட்டத்திலும் இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகிக்காது. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு இந்தியா கோரிக்கை விடுக்குமே தவிர அழுத்தங்களை முன்வைக்காது. தேசிய பிரச்சினைக்கு உள்நாட்டில் தீர்வைக் காண்பதையே இந்தியா விரும்பும் என்றார்.

# துணைமருத்துவ சேவையாளர்கள் தொடர்கின்றனர் போராட்டத்தை

நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களின் ஒன்றிணைந்த சங்கம் கடந்த 26 ஆம் திகதியிலிருந்து முன்னெடுத்துவரும் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கோரிக்கைகள் குறித்து பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்கவுடன் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்ததாக சங்கத்தின் செயலாளர் அஜித் திலகரட்ன தெரிவித்தார். இதேவேளை, வேலை நிறுத்தத்தை கைவிடுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்தது.

எனினும் நீதிமன்ற உத்தரவு குறித்து தமக்கு அறிவிக்கப்படவில்லை என அஜித் திலகரட்ன தெரிவித்தார்.ஊடகங்கள் மூலம் இந்த தகவல் வெளிவந்த போதும் உத்தியோகபூர்வமாக தமக்கு அறிவிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களின் ஒன்றிணைந்த சங்கம் கடமைக்குத் திரும்ப வேண்டும் என பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வறட்சியின் கோரப்பிடியில் நாடு பாதிப்பின் விளிம்பில் 20 இலட்சம் பேர்

(கொழும்பு)

நாட்டடில் நிலவியுள்ள வறடசியினால் 14 மாவட்டங்களை சேர்ந்த ஐந்து இலட்சத்து 75 ஆயிரத்து 724 குடும்பங்களைச் சேர்ந்த 20 இலட்சத்து 7,225 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 18,541 குடும்பங்களைச் சேர்ந்த நான்கு இலட்சத்து 12 ஆயிரத்து 451 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வறட்சியினால் அம்பாறை மாவட்டத்தில் 31,278 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு இலட்சத்து 52 ,673 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 28,500 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஊவா மாகாணத்தின் மொன ராகலை மாவட்டத்தில் 53, 51[illegible] குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து 14 ஆயிரத்து 48 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நிலவுகின்ற வறட்சியினால் வட மாகாணத்தில் ஒரு இலட்சத்து ஐயாயிரத்து 955 குடும்பங்களைச் சேர்ந்த மூன்று இலட்சத்து 82,471 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த பிரதேசங்களில் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு போதுமான நீரைப் பெற்றுக்கொள்ள முடியாமல் செய்கையாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர் கொண்டுள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதுதவிர வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் வறட்சியினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# குளவி கொட்டியதால் ஒருவர் உயிரிழந்தார்


திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பத்தனை போகாவத்தை காட்டுப்பகுதியில் வழிபாட்டு தலம் ஒன்றில் பூசைகளில் ஈடுபட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவர்கள் மீது குளவி தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 4 ஆண்களும் 3 பெண்களும் அத்தோடு 4 சிறுவர்களும் குளவி கொட்டுக்கு இலக்காகி கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது மரத்தில் கட்டியிருந்த குளவி கூட்டை குரங்கு ஒன்று கலைத்ததன் காரணமாகவே குளவிகள் கலைந்து வந்து இவ்வாறு தாக்கியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். உயிரிழந்தவர் போகாவத்தை பகுதியை சேர்ந்த கிட்னன் சிவபிரகாசம் (வயது - 59) 3 பிள்ளைகளின் தந்தையாவார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







கொழும்பில் இடம்பெற்றுவரும் “ஷிப்போதயம் - 2014” கைப்பணிக்கண்காட்சியின் நேற்றைய இரண்டாம் நாள் நிகழ்வில் பார்வையாளர்கள் கண்காட்சியை பார்த்து இரசித்தனர்.

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

## கணிதம்

### பகுதி I

01) புத்தகம் ஒன்றின் விலை ரூ. 60 உம், புற அட்டையின் விலை ரூ. 10 உம் ஆகும். இரு புத்தகங்களினதும் புற அட்டைகள் இரண்டினதும் விலை எவ்வளவு?

02) 4008 Kg, மெட்ரிக் தொன்னில் தருக.

03) 4.08 x 0.1 பெறுமானம் காண்க.

04) ஒருவருக்கு $\frac{1}{2}$ படி 4 பாண்களை எத்தனை பேருக்குப் பங்கிடலாம்.

05) $\frac{1}{4}$ சதவீதத்தில் தருக.

06) $\frac{1}{8}+\frac{1}{4}$ பெறுமானம் காண்க.

07) 8, 7,6,8,7,6,9,4,6 இவ் எண்தொடரின் ஆகாரம் யாது?


08) 2, 8 இல் பெருக்கலிடை யாது?

09) $\frac{x}{2}=3$ x இன் பெறுமானம் காண்க.

10) 6 - 10 வகுப்பாயிடையில் நடுப்பெறுமானம் என்ன?


11) முக்கோணி ABC யில் $\hat{A}+\hat{B}=120^0$ ஆகும். $\hat{B}+\hat{C}=100^0$ ஆகும். $\hat{C}, \hat{B}$ யின் பெறுமானம் காண்க.

12) $1011_{\text{இரண்டு}} - 101_{\text{இரண்டு}}$ இன் பெறுமானத்தினைக் காண்க.

13) 

இம் முக்கோணம் இரண்டிலும் ப: கோ: ப எனும் சந்தர்ப்பத்தின் கீழ் ஒருங்கிசைவதற்கு வேண்டிய எஞ்சிய அங்க சோடியினை எழுதுக.


14) (3x + 1) (4 - x) சுருக்குக.

15) 

PQSR வட்ட நாற்பக்கங்களாகும். இங்கு QSR ஐ காண்க.

16) $\sqrt{V = x^2 - 2gh}$ எனின் x ஐக் காண்க.

17) -4 , - 10, 16 ............... இக்கூட்டல் விருத்தியில்,
1) பொது வித்தியாசம் காண்க.
2) 4 ஆவது உறுப்பினைக் காண்க.

18) 

x இன் பெறுமானத்தினைக் காண்க.

19) a+ 2 உம், b = -3 எனின், $\frac{3a^3}{b^2}$ இன் பெறுமானம் காண்க.

20) A யிலிருந்து B யின் திசைக்கோள் $048^0$ ஆகும். B யிலிருந்து A யின் திசைக்கோள் யாது?

21) $\log_3 243$ இன் பெறுமானத்தினைக் காண்க.

22) x + 4 y = 8 ஆகும்.
x + 2y = 2 ஆகும்
தீர்க்காமல் x + y இன் பெறுமானத்தினைக் காண்க.

23) கமலனுக்கும் விமலனுக்குமிடையில் 2:3 எனும் விகிதத்திலும், கமலனுக்கும் கசனுக்குமிடையில் 3:1 எனும் விகிதத்திலும், பங்கிட்ட விகிதத்தினைக் காண்க.

24) $A=\begin{bmatrix}1 & 2\\ 3 & 5\end{bmatrix}$ $B=\begin{bmatrix}-1 & 2\\ 0 & 4\end{bmatrix}$ தாயம் 2 B இனைக் காண்க.


25) $Y=(x-1)^2+5$ இவ் வரைபின்
1) சமச்சீர் அச்சின் சமன்பாட்டினை எழுதுக.
2) இழிவுப் புள்ளியின் ஆள்கூறுகளை எழுதுக.

26) $(16)x^{\frac{-3}{4}}\left(8^{1/4}\right)^0$ பெறுமானம் காண்க.

27) 5% எளிய வட்டிக்கு ரூ.10000 ஐ கடனுக்கு பெற்ற ஒருவர் 2 வருடங்களின் பின் கடனிலிலிருந்து மீளுவதற்கு செலுத்த வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

28) $\sqrt{48}+\sqrt{3}$ இன் பெறுமானம் காண்க.

29) (1 - x), x, $(x-1)^2$ பொது மடங்கில் சிறியதைக் கணிக்க.

30) 

1) $\frac{AE}{EB}$ இற்கு சமமாகும் விகிதத்தினை எழுதுக
2) AE இன் நீளத்தினைக் காண்க.

### பகுதி B

01) ரூ. 188000 ஆண்டுப் பெறுமானம் உடைய வீடொன்றிற்கு வரியாக ஆண்டுப் பெறுமானத்தின் 5% வீதம் அறவிடப்படுகிறது. இவ்வீடு ரூ. 8000 மாதாந்த வாடகைக்கு விடப்படுகிறது. ஒரு வருடத்திற்குமான வாடகை அறவிடப்பட்டு, அதிலிருந்து வரியினை செலுத்தி மீதிப்பணம் 25% வட்டி வழங்கும் வங்கியில் வைப்பிலிடப்படுகிறது.

1) ஆண்டு வரியினைக் காண்க
2) காலாண்டு வரியினைக் காண்க.
3) அவர் வருடத்திற்கு பெறும் மொத்த வாடகை எவ்வளவு?
4) அவர் வங்கியில் வைப்பிலிட்ட பணம் எவ்வளவு?
5) அவருக்கு வருட இறுதியில் கிடைக்கப்பெற்ற மொத்த பணம் எவ்வளவு?

02) நீர்த்தாங்கியொன்று 1/4 பங்கு நீரால் நிரம்பியுள்ளது. அதில் குளிப்பதற்காக 20 லீற்றர் நீர் பயன்படுத்தப்பட்ட பின் தாங்கியில் 1/12 பங்கு நீர் எஞ்சியது.

1) குளிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட நீர் நீர்த் தாங்கியின் என்ன பின்னமாகும்.
2) தாங்கியின் கொள்ளளவினைக் கணிக்க?
3) ஆரம்பத்தில் நிரம்பியிருந்த நீரின் கனவளவு யாது?

03) அமாலியிடமும் நிமாலியிடமும் பெட்டியொன்றில் சிவப்பும் கறுப்பும் பேனைகள் உள்ளன. பெட்டியிலிருந்து நிமாலி எழுமாற்றாக பேனையொன்றை எடுக்கும்போது அது சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவு 3/5 ஆகும். எடுத்த பேனையை நிமாலிக்கு எழுதுவதற்கு கொடுத்த அமாலி இன்னொரு பேனையை பெட்டியிலிருந்து எடுத்தாள்.

1) முதலாவது சந்தர்ப்பத்தில் கறுப்பு பேனை கிடைப்பதற்கான நிகழ்தகவு யாது?
2) இரண்டாம் சந்தர்ப்பத்தில் பேனையொன்றை எடுப்பதற்கான நிகழ்தகவினைக் காட்டும் மரவரிப்படமொன்றை வரைக.
3) மரவரிப்படம் மூலம் இரு சந்தர்ப்பங்களிலும் சிவப்பு பேனை கிடைப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.
4) குறைந்தது இரு சந்தர்ப்பங்களில் ஒரு முறையாவது கறுப்புப் பேனை கிடைப்பதற்கான நிகழ்தகவினைக் கணிக்குக.

04) பாடசாலையொன்றில் புலமைப் பரிசில் வகுப்பொன்றில் அரையாண்டுப் பரீட்சையில் மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகளின் பரம்பல் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| புள்ளிகள் | 1-10 | 11-20 | 21-30 | 31-40 | 41-50 | 51-60 | 61-70 | 71-80 | 81-90 | 91-100 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 7 | 10 | 12 | 19 | 18 | 17 | 16 | 14 | 6 | 1 |

1) இப்புள்ளிகளின் ஆகார வகுப்பு யாது?

2) 51 - 60 எனும் வகுப்பாயிடையின் நடுப்பெறுமானத்தினை எடுகொண்ட இடையாகக் கொண்டு மாணவனொருவன் பெற்ற புள்ளிகளின் இடையைக் கணிக்க.

3) 60 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை சதவீதத்தில் தருக.

05) 18 cm ஆரையுடைய அரைக்கோளவடிவ பாத்திரமொன்றில் இலைக்கஞ்சி இடப்பட்டுள்ளது. இதை எடுப்பதற்காக 3 cm ஆரையுடைய அரைக்கோளவடிவ கரண்டி பாவிக்கப்படுகிறது. 3 cm ஆரையும் 12 cm உயரமும் உடைய கோப்பையிலிட்டு அவை விற்கப்படுகின்றன.

1) இலைக்கஞ்சி நிரப்பப்பட்ட பாத்திரம் அரைக்கோள வடிவ கரண்டியின் எத்தனை மடங்காகும்?
2) கோப்பையின் கொள்ளளவு கரண்டியின் கொள்ளளவிலும் எத்தனை மடங்காகும்?

3) முற்றாக நிரப்பப்பட்ட இலைக்கஞ்சி கோப்பையொன்று ரூ.5 உம் கருப்பட்டி ஒரு துண்டு ரூ. 1 உம் ஆகும். பாத்திரம் முற்றாக இலைக்கஞ்சியினால் நிரப்பப்பட்டுள்ளபோது அவற்றினை முற்றாக விற்றுப் பெற்ற பணம் எவ்வளவு?

(ஆரை r உடைய கோளத்தின் கனவளவு $\frac{4\pi r^3}{4}$
ஆரை r உடைய சிலின்டரின் கனவளவு $\pi r^2 h$ ஆகும்.

## பகுதி II

### பகுதி A

01) வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதற்கு அனிலுக்கு ரூ.60,0000 தேவைப்பட்டது. அவன் ரூ. 250, 000 ஐ 20% எளிய வட்டிக்கு சரஸ்வதி கம்பனியிலும், மீதிப் பணத்தினை 22% எளிய வட்டிக்கு நரேன் கம்பனியிலும் பெற்றுக்கொண்டான்.

1) கடனிலிருந்து மீளுவதற்கு அனில் சரஸ்வதி கம்பனிக்கு வருடக் கடையில் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?
2) நரேன் கம்பனியிலிருந்து பெற்ற கடன் பணம் எவ்வளவு?
3) ஒரு வருடக் கடையில் நரேன் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?


4) அனில் இதே முறையில் இப்பணத்தொகையினை அதே வட்டி விகிதத்தில் கூட்டு வட்டிக்கு பெற்று ஒரு வருடத்தில் கடனிலிருந்து மீண்டார் எனின், எளிய வட்டியும் கூட்டு வட்டியும் சமமானதா? அல்லது வேறுபட்டதா? காரணம் தருக.

02) விளையாட்டு சங்கமொன்றிலிருந்த 40 மாணவர்களிடமிருந்து பெற்ற தகவல்கள் கீழே வென்வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளன.

A - (கிரிக்கெட் விளையாடும் மாணவர்கள்)

B - (கரப்பந்து விளையாடும் மாணவர்கள்)

C - (எல்லே விளையாடும் மாணவர்கள்)




1) 3 விளையாட்டுக்களிலும் பங்கு பற்றும் மாணவர்கள் எத்தனை பேர்?

2) கிரிக்கெட் விளையாடும் ஆனால் கரப்பந்து விளையாடாத மாணவர்கள் ஏத்தனை பேர்?

3) $(A \cap B) \cap C'$ உரித்தான பிரதேசத்தினை நிழற்றிக் காட்டுக.

4) $n(A \cap B)C'$ பெறுமானத்தினைக் காண்க.

5) இச்சங்கத்திற்கு எல்லே விளையாடும் ஒரு மாணவன் வந்தால், அவருடன் விளையாட முடியுமான மாணவர்களின் எண்ணிக்கை யாது?

03) (அ) $y = x(x+2)$ வரைபை வரைவதற்குரிய பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -5 | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| y | | 8 | | 0 | -1 | 0 | | | 15 |

1) அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

2) x அச்சு வழியே 10 சிறிய அலகுகளை 1 எனவும், y அச்சு வழியே 10 சிறிய அலகுகளை 2 எனவும் கொண்டு மேற்படி வரைபினை வரைக.

ஆ. 1) $y = x(x+2)$ வரைபின் இழிவுப் பெறுமானம் யாது?

2) சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?

3) $y = x(x+2)$ வரைபு மறையாகும். ஒரு பெறுமான வீச்சினைக் காண்க.

4) $x^2 + 2x = 0$ மூலகங்களை வரைபினூடாகக் காண்க.

04) $A = \begin{pmatrix} 2x & 8 \\ 7 & 5x \end{pmatrix}$ $B = \begin{pmatrix} y & 4 \\ -8 & -y \end{pmatrix}$ $C = \begin{pmatrix} 13 & 20 \\ -7 & 1 \end{pmatrix}$

1) தாயம் 3 B இனை y இனூடாக எழுதுக.

2) தாயம் A + 3 B இனை (x,y இனூடாக) எழுதுக.

3) தாயம் A + 3 B = C எனின், ஊடாக ஒருங்கமை சமன்பாட்டினை கட்டியெழுப்புக. அவற்றினைத் தீர்த்து பெறுமானங்களைக் கண்ட தாயம் A, தாயம் B இனை மீள எழுதுக.

05) விளையாட்டுப் பொருட்களைத் தயாரிக்கும் குறிப்பிட்ட நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் பணிப்பெண்கள் பொம்மைக்கான ஆடைகளைத் தனித்தனியாக தயாரிக்கிறார்கள். நாளாந்தம் பொம்மைகளுக்கான ஆடை தைப்பதை கீழுள்ள அட்டவணை காட்டுகிறது.

| நா.பொ.ஆடை. த | 150-200 | 200-250 | 250-300 | 300-350 | 350-400 | 400-450 | 450-500 |
|---|---|---|---|---|---|---|---|
| பணி. பெ. எண் | 4 | 9 | 14 | 25 | 9 | 6 | 6 |

1) ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தினை எடுகொண்ட இடையாகக் கொண்டு பணிப்பெண் நாளொன்றிற்கு தைக்கும் ஆடைகளின் இடையைக் காணிக்க.

2) இதில் எழுமாற்றாக பணிப்பெண் ஒருவரைத் தெரிந்தெடுத்தால் அவர் நாளாந்தம் தைக்கும் ஆடைகள் 250 அல்லது அதற்கு மேல் தைப்பவராக இருப்பதன் நிகழ்தகவினைக் கணிக்க.

06) 14.50 m உயரமுடைய கட்டடத்தின் உச்சியில் புத்தர் சிலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் அடியிலிருந்த கிடைத்தளத்தில் A எனும் புள்ளியிலிருந்து கட்டட உச்சியின் ஏற்றக்கோணம் $26^0$ ஆகும். புத்தர்சிலை உச்சியின் ஏற்றக்கோணம் $38^0\ 12'$ ஆகும்.


அ) மேற்படி தரவுகளை பரும்படி படத்தில் குறிக்க.
ஆ) திரிகோண கணித அறிவினைப் பயன்படுத்தி,
i) கட்டட அடியிலிருந்து A இற்கு உள்ள தூரம்?
ii) புத்தர் சிலையின் உயரம் என்ன?

## பகுதி III

07) i) AB = 6 cm ABC = $45^0$, BC = 8.5cm ஆகுமாறு முக்கோணி ABC ஐ நிர்மாணிக்குக.
ii) பக்கம் AB ஐ A இல் தொடுமாறு ABC இரு கூறாக்கியின் மீது மையம் அமையுமாறு வட்டத்தினை அமைக்க.
iii) B யிலிருந்து வட்டத்திற்கு தொடலியை அமைக்க. (BA தவிர) BD எனப் பெயரிடுக. BD யின் நீளம் எவ்வளவு?

08) 1 -7 வரை இலக்கமிடப்பட்டுள்ள அட்டைகள் மேசைமீது புரட்டி வைக்கப்பட்டுள்ளன.
அ) அதில் ஒன்றை எழுமாறாக எடுத்தால் அது இரட்டை எண்ணாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?
ஆ) முதலில் எடுத்த அட்டையை கையில் வைத்துக்கொண்டு இரண்டாவது அட்டை எடுக்கப்படுகிறது. மேற்படி தகவல்களை தெட்காட்டி வரைவில் காட்டுக. அதனூடாக,
i) எடுக்கும் அட்டை இரண்டும் இரட்டை எண்ணாதல்.
ii) அட்டைகள் இரண்டிலும் உள்ள எண்கள் மூன்றிலும் குறைதல்.
iii) இரண்டு அட்டைகளினதும் கூட்டுத்தொகை 10 ஆதலின் நிகழ்தகவினைக் கணிக்க.

09) வட்டத்தின் வில்லினால் வட்டத்தின் மையத்தில் எதிரமைக்கப்படும் கோணம் அது வில்லினால் பரிதியின் எஞ்சிய பகுதியின் மீது எதிரமைக்கப்படும் கோணத்தின் இரு மடங்கு என நிறுவுக.




O மையமாகும். AC நேர்கோடாகும். காரணம் காட்டுவதன் ஊடாக,
i) x இன் பெறுமானம் யாது?
ii) y இன் பெறுமானம் யாது?
iii) ABC பெறுமானத்தினைக் காண்பதற்கு நிறுவின தேற்றத்தினைப் பயன்படுத்தும் விதத்தினை விபரிக்க.





நாட்டிற்கு வெற்றி போசாக்கு நிறைந்த ஒரு தேசம் தொலைநோக்கு 2016 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நேற்று முன்தினம் யாழ். பொது நூலகத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மங்கள விளக்கேற்றுவதையும் தேசிய போசாக்கு ஒருங்கிணைப்பாளர் லலித் சந்திரதாஸ் உரையாற்றுவதையும் கலந்துகொண்ட பிரதிநிதிகளையும் காணலாம்.

(படங்கள் : கே.நந்தகுமார் -25)

# வாழ்வாதாரத்திற்கான உதவிகளை மக்கள் சரியாக பயன்படுத்தவேண்டும்

## வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு



எங்களுக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பங்களையும், வளங்களையும் சரியாகப் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேறுவதற்கு நாம் அனைவரும் முன்வரவேண்டும். எமது மக்கள் யாரிடமும் கையேந்தாத வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதற்காக எமது தலைவரும், அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தா அயராது உழைத்துக்கொண்டிருப்பவர் என வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் இராமநாதன் ஐங்கரன் தெரிவித்தார்.

பிரான்ஸ் நிறுவனத்தின் வாழ்வாதாரத் திட்டம் வழங்கும் நிகழ்வு பிரான்ஸ் நிறுவனத்தின் அச்சுவேலி அலுவலகத்தில் அதன் உத்தியோகத்தர் திருமதி.எஸ்.இராஜேஸ்வரியின் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தலைவரும், அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தாவின் விருப்பம் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தி எமது மாவட்டத்தை வறுமையற்ற மாவட்டமாக மாற்றவேண்டும் என்பதே. அதற்காக அயராது உழைத்து வருகின்ற ஒரே ஒரு தமிழ்த் தலைவர் என்றால் அது எமது அமைச்சர் தான் என்பதை நீங்கள் அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். எமது மக்களின் வறுமையை ஒழிப்பதற்காக பிரான்ஸ் நிறுவனத்தினருடன் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாங்களும் இணைந்து உழைப்போம் எனத் தெரிவித்ததுடன், பிரான்ஸ் நிறுவனத்தினருக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் திரு.மருதலிங்கம் பிரதீபன், பிரான்ஸ் நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் எஸ்.வந்துளா, வலிகிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் மாணிக்கம் தங்கவேல், மற்றும் கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

# கடன் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சி “சஹன அருண” நிவாரண கடன் வழங்கல் விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நகர் மேற்கு வாழ்வின் எழுச்சி சமூக மைய வங்கியில் இடம்பெறவுள்ளது.

வங்கி முகாமையாளர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சகல வர்த்தகர்களினதும் ப.நோ. கூட்டுறவுச் சங்கங்கள், சந்தை வியாபாரிகள் உட்பட நிறுக்கும் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 2, 4, 5, 9, 11 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்திலும், 15, 16, 18 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உடுப்பிட்டி உப அலுவலகத்திலும் நடைபெறவுள்ளன.

குறிப்பிட்ட நாட்களில் வர்த்தகர்கள் தமது நிறுத்தல் அளவை கருவிகளுக்கு முத்திரையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

# முறைப்பாடுகளை தெரிவிக்க விரைவில் தகவல் பிரிவு

## முல்லைத்தீவு பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

பொதுமக்களின் பிரச்சினைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் காரியாலயத்தில் தகவல் பிரிவொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சம்பிக்க ஸ்ரீவர்தன தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

இந்த தகவல் பிரிவின் மூலம் முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்குட்பட்ட கிராமங்களில் இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் தமது கிராமங்களில் காணப்படும் குற்றச்செயல்கள் பற்றி முலலைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் அமைக்கப்படவுள்ள தகவல் பிரிவுக்கு தெரியப்படுத்த முடியும்.

இவ்வாறு பொதுமக்கள் தெரிவிக்கும் முறைப்பாடுகளை அல்லது தெரியவரும் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கென இரண்டு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த இரண்டு குழுவினரும் எந்த நேரமும் கடமையில் இருப்பார்கள் எனவும் அவர் மேலும் கூறினார்.

# தனிநாயகம் அடிகளாரின் நினைவு நிகழ்வு மன்னாரில்

(மன்னார்)

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நினைவு தின நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு மன்னாரில் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

மன்னார் பழைய நூல் நிலையத்துக்கு முன்னால் அமைககப்பட்டுள்ள தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் அதைத்தொடர்ந்து அஞ்சலி உரைகளும் இடம்பெறவுள்ளன.

மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை, இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வுக்கு மன்னார் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் மஹாதேவ சர்மா தர்மகுமார குருக்கள் தலைமை தாங்குகிறார்.

தமிழ்ச் சங்கத்தின் சிரேஷ்ட உபதலைவர் ஜனாப் மக்கள் காதர் வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார். தமிழ்ச் சங்கத்தின் உதவிப் பொதுச் செயலாளர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் சிறப்புரை ஆற்றவுள்ளதுடன் நிர்வாக உறுப்பினர் தே.பி.சிந்தாத்துரை நன்றியுரை ஆற்றவுள்ளார்.

தமிழ்ச் சங்கத் தலைவர் அருட் தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் இந்நிகழ்வுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிகழ்வில் பங்கேற்றுச் சிறப்பிக்கும்படி மன்னார் தமிழ்ச் சங்கம் அனைவரையும் அழைக்கின்றது.

# இலங்கை வங்கியின் சேவைகள் நேற்று திடீரென செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று இலங்கை வங்கியின் தொடர் இணைய சேவை திடீரென்று செயலிழந்ததன் காரணமாக அதன் வாடிக்கையாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று சனிக்கிழமை என்பதனால் இலங்கையின் பிரதான கிளைகளிலேயே வங்கி நடவடிக்கை நடைபெறுவது வழமை இந்நிலையில் நேற்றுக் காலை முதல் நண்பகல்வரை கொழும்புடனான இணையத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் வாடிக்கையாளர்கள் பணத்தைப் பெறுவதில் கால விரையம் ஏற்பட்டது.

இதன்பின்னர் நண்பகல் தொடர்புகள் சீர் செய்யப் பட்ட பின்னர் வங்கிச் சேவை நடைபெற்றதாகவும் தெரிவிக்கிப்படுகிறது.

யாழ். வைத்தியசாலை வீதி, ஸ்ரான்லி வீதி ஆகிய இலங்கை வங்கிக் கிளைகளிலும் இத்தகைய நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (பா)

# சிரியாவில் உள்நாட்டுப் போர்

# அகதிகளாக 30 இலட்சம் பேர்

## சுட்டிக்காட்டுகிறது ஐ.நா. அறிக்கை



சிரியாவில் தீவிரமடைந்துள்ள உள்நாட்டுப் போரால் அந்த நாட்டு மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர். 30 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

இதுகுறித்து ஐ.நா. சபையின் அகதிகள் மறுவாழ்வுத் துறைத் தலைவர் அண்டோனியா கட்ரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

சிரியாவில் உள்நாட்டுப் போர் காரணமாக 2011 முதல் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர். இதுவரை 30 இலட்சம் பேர் அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். கடந்த ஓராண்டில் மட்டும் 10 இலட்சம் பேர் அகதிகளாகி உள்ளனர்.

லெபனானில் 10,14,000 பேரும் துருக்கியில் 8,15,000 பேரும் ஜோர்தானில் 6,08,000 பேரும் அகதிகள் முகாம்களில் வாழ்கின்றனர். இவர்கள் தவிர ஈராக், எகிப்து உள்ளிட்ட நாடுகளிலும் இலட்சக்கணக்கானோர் உள்ளனர். உள்நாட்டிலேயே 65 இலட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர். ஒட்டுமொத்தமாக சிரியாவின் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் புகலிடம் தேடி வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

ஐ.நா. புள்ளிவிபரப்படி அகதிகள் மக்கள் தொகையில் சிரியா முதலிடத்தில் உள்ளது. பலஸ்தீனம் இரண்டாம் இடத்தில் உள்ளது. சிரியாவில் கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை 1,91,000 பேர் பலியாகி உள்ளனர். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாத அச்சுறுத்தலை சமாளிக்க அவசர நடவடிக்கை


## பிரிட்டன் பிரதமர் தெரிவிப்பு



பிரிட்டனில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் முன் எபோதும இல்லாத அளவுக்கு அதிகரித்து வருவதாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

மேலும் அதை சமாளிக்க அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ள உறுதி எடுக்க வேண்டும் ஈராக் மற்றும் சிரியாவில் இருந்து திரும்பிய பிரிட்டிஷ் ஜிஹாதிகளிடம் இருந்து ஆபத்து வளர்ந்து வருவது தெரிகிறது. மத்தியதரைக் கடல் பகுதியில் பல ஆண்டுகளாக நீடித்து வரும் பயங்கரவாத அச்சுறுத்தல் தற்போது மேலும் அதிகரித்துள்ளது.

இங்கிலாந்துக்கு எதிராக வளர்ந்து வரும் இந்தப் பிரச்சினையை சமாளிக்க இந்த அரசு இராணுவ நடவடிக்கை எடுக்கவில்லை. ஈராக் மற்றும் சிரியா சென்றிருந்த 500இற்கும் மேற்பட்ட பிரித்தானியர்களில் பாதிப்பேர் நாடு திரும்பி இருப்பார்கள் என நம்பப்படுகிறது. மேலும் பிரிட்டனில் பயங்கரவாத இயக்கத்தை சேர்ந்தவர் என சந்தேகிக்கப்படும் நபர்களை கைது செய்து நடவடிக்கை எடுப்பதோடு பாதுகாப்பு பலப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.




பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா செல்லவிருப்பதை அடுத்து குஜராத்தில் அவரை வாழ்த்தி வடிவமைக்கப்பட்டுள்ள சிற்பம் பார்வையாளர்களைக் கவர்ந்துள்ளது...

# துப்பாக்கியுடன் ஆலயம் வந்த திரைப்பட நடிகரால் பரபரப்பு



ஆந்திராவில் நடிகர் சரண்ராஜ் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கோவிலுக்கு சென்றபோது கைத்துப்பாக்கியுடன் சென்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் கனிபாக்கத்தில் உள்ள வரசித்தி விநாயகர் கோவிலுக்கு நடிகர் சரண்ராஜ் சென்றுள்ளார். அவர் கோவிலுக்கு சென்று வந்ததை சில உள்ளூர் தொலைக்காட்சிகள் படம் பிடித்து ஒளிபரப்பியபோது சரண்ராஜ் கைத்துப்பாக்கியுடன் கோவிலுக்குள் சென்றமை தெரிய வந்துள்ளது.

பின்னர் இதுபற்றி சரண்ராஜுக்கு தகவல் தெரிவித்ததையடுத்து, அவர் தனது தவறை உணர்ந்து, நிருபர்களிடம் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்துள்ளார்.

# ஆட்சியை கைப்பற்ற முயலும் பாகிஸ்தான் இராணுவம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில், பிரதமர் பதவியை நவாஸ் ஷெரீப் ராஜினாமா செய்ய வலியுறுத்தி, எதிர்க்கட்சி தலைவர் இம்ரான் கானும், மதகுரு காதிரியும் தொடர் போராட்டங்களை நடாத்தி வருகின்றனர்.இதனை முடிவுக்கு கொண்டு வருவதற்காக, அரசுக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் இராணுவம் நேற்று முன்தினம் முயற்சிகளைத் தொடங்கியது. இதற்கு இரு தரப்பும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இதுகுறித்து நவாஸ் ஷெரீப் கூறுகையில், 'தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண உதவுமாறு, இராணுவத்தை நான் கேட்கவில்லை' என்றார். மதகுரு காதிரி கூறுகையில், பிரச்சினைக்கு தீர்வு காண நவாஸ் ஷெரீப் தான் இராணுவத்தை அழைத்துள்ளார் என்று குற்றம் சாட்டினார்.பாகிஸ்தானின் அரசியல் நெருக்கடிகளைப்பயன்படுத்தி, ஆட்சியை இராணுவ தளபதி கைப்பற்றலாம் என்று பேசப்படுகிறது.



உலகச் செய்திகள்

# பாகிஸ்தானின் செயல் ஏமாற்றமளிக்கிறது

## மோடி தெரிவிப்பு



காஷ்மீர் பிரிவினைவாதிகளு டன் பேச்சு நடத்திய பாகிஸ்தானின் செயல் ஏமாற்றமளிப்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். ஜப்பான் செல்லும் வழியில் நிருபர்களிடம் பேசிய அவர், எனது பதவியேற்பு விழாவின் போது பாக்.,பிரதமர் நவாஸ் ஷெரீப் கலந்து கொண்டது மிகவும் சிறந்த தருணம். அப்போது இரு நாட்டு உறவுகளை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில், பாகிஸ்தான் அரசு காஷ்மீர் பிரிவினைவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சிப்பது மாயபிம்பத்தை ஏற்படுத்துவதாகும். பாகிஸ்தானின் செயல் ஏமாற்றத்தை அளிககிறது. இவ்வாறு மோடி தெரிவித்தார்.

# "எபோலா" எதிர்ப்பு மருந்து பரிசோதனை வெற்றி



எபோலா உயிர்க்கொல்லி நோயை குணப்படுத்த மருந்து கண்டுபிடிக்கவில்லை.எனினும் அமெரிக்கா தயாரித்த "ஷமாப்' என்ற மருந்தை அதிகாரப்பூர்வமின்றி நோய் தாக்கியவர்களுக்கு வழங்கி சிகிச்சை அளிக்க உலக சுகாதார நிறுவனம் அனுமதி வழங்கி உள்ளது.

'ஷமாப்' என்ற மருந்தை 'சேஸ் மகாகு யஸ்' இனத்தை சேர்ந்த 'எபோலா' நோய் தாக்கிய 18 குரங்குகளுக்கு செலுத்தி பரிசோதிக்கப்பட்டது. அதில் குரங்குகளுக்கு 'எபோலா' நோய் முற்றிலும் குணமடைந்தது. குரங்குகள் அனைத்தும் உயிர் பிழைத்தன.

அதைத்தொடர்ந்து இந்த மருத்துவ பரிசோதனை வெற்றி அடைந்ததாக விஞ்ஞானிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதே நேரத்தில் நோய் குணமாவதில் மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள வித்தியாசம் குறித்து குழப்பம் அடைந்துள்ளனர். இதுகுறித்து ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. இந்த மருந்தின் தரத்தை மேம்படுத்தி மனிதர்களிடம் விரைவில் பரிசோதனை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# சூரியப் பிளப்புகளால் பூமிக்கு பாதிப்பு

## நாசா அறிவிப்பு

சூரியனில் மிக வீரியமான பிளம்புகள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. அந்தச் சூரிய பிளம்புகளால் பூமிக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று பிரபல விண்வெளி ஆய்வு மையமான நாசா தெரிவித்துள்ளது.

சூரியனில் எப்போதும் நடுக்கம் இருந்து கொண்டே இருக்கும். அப்போது அதிலிருந்து நெருப்புக் கோளங்கள் தோன்றும். இந்தச் சூரிய நடுக்கம் ஒவ்வொரு 11 ஆண்டுகளுக்கும் உச்சத்தை அடையும். அப்போது அதன் பிளம்புகள் மிக வீரியத்துடன் இருக்கும்.

இதுபற்றி நாசாவின் செய்தித் தொடர்பாளர் கேரன் :.போக்ஸ் கூறும்போது, "இந்தச் சூரியப் பிளம்புகள் பூமியில் உள்ள ஜி.பி.எஸ். மற்றும் இதர தொலைதொடர்பு சிக்னல்களைப் பாதிக்கும்" என்று கூறியுள்ளார்.

நாளடைவில் சூரியப் பிளம்புகள் குறைந்து கொண்டே வந்தாலும் கூட சூரிய நடுக்கம் அதன் குறைந்தபட்ச அளவை அடையும்வரை இந்தப் பிளம்புகளின் தாக்கம் பூமிக்கு பாதிப்பை ஏற்படுத்திக்கொண்டே இருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதனால் மனிதர்களுக்கோ பூமியில் உள்ள பிற உயிரினங்களுக்கோ எந்த பாதிப்பும் ஏற்படாது.

# ஹொரண கைத்தொழிற்பேட்டையின்

# தொழிற்துறை முன்னேற்றம் குறித்து ஆராய்வு



ஹொரண கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான ஹொரண கைத்தொழிற் பேட்டையின் தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் விஜயம் மேற்கொண்டு ஆராய்ந்தறிந்து கொண்டார்.

களுத்துறை மாவட்டத்தின் ஹொரண பகுதியில் அமைந்துள்ள கைத்தொழிற்பேட்டைக்கு அமைச்சர் நேற்று விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது கைத்தொழிற்பேட்டையின் அமைவிடம் தொடர்பாகவும் தொழிற்பேட்டையின் தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்த அமைச்சர் தொழிற்துறைகளை மேலும் விரிவாக்கம் செய்து மேம்படுத்துவது தொடர்பிலும் அமைசசர் கவனம் செலுத்தினார்.

அத்துடன், குறித்த கைத் தொழிற்பேட்டை எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள், இடர்பாடுகள் தொடர்பில் தாம் ஆராயந்து அறிந்து கொள்ளும் அதே வேளை, துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதாகவும் தெரிவித்தார்.

இதன்போது, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் ஆரியசிங்க உடனிருந்தார்.

---

## ஷில்போதயம்...

போதயம் 2014"தேசிய கைப்பணி கண்காட்சி நேற்றையதினம் 3ஆவது நாளாகவும் இடம்பெற்றது.

3ஆம் நாளான நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கண்காட்சியை பார்வையிட்டதுடன் கைவினை கைப்பணி துறைசார்ந்தோருடன் கலந்துரையாடினார். அத்துடன் அவர்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

முன்பதாக பிரதான வாயிலில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து வரவேற்றார்.

இதனையடுத்து தேசிய அருங்கலைகள் பேரவை, பனை அபிவிருத்தி சபை, தேசிய வடிவமைப்பு நிலையம் ஆகிய நிறுவனங்களால் காட்சிப்படுத்தப்பட்ட உற்பத்திகள் மற்றும் ஆக்கப் பொருட்களின் காட்சி கூடங்களுக்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்டார்.

இதனிடையே இக்கண்காட்சியை ஏற்பாடு செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

இக்கண்காட்சி இன்றையதினம் நிறைவுபெறவுள்ள நிலையில் இக்கண்காட்சியினை பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கமைவாக "ஷில்போதயம் 2014" கைப்பணி கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்படத்தக்கது.

இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, மேலதிக செயலாளர் சுசந்த டி சில்வா, கைத்தொழில் அபிவிருத்திசைபத் தலைவர் நாவாஸ் ரஜாப்தீன், தேசிய அருங்கலைகள் பேரவைத் தலைவர் புத்திகீர்த்தி சேன, தேசிய வடிவமைப்பு நிலையத்தின் தலைவர் மார்ஷல் ஜனதா, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் நவாஸ் ரஜாப்தீன், வடகடல் நிறுவனத் தலைவர் திஸவீரசிங்க உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

---

## காணாமற்...

கள் உட்பட பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதனையடுத்து ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் அனுப்பி வைப்பதற்காக வவுனியா அரசாங்க அதிபரிடம் மகஜரொன்று கையளிப்பதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிவசக்தி ஆனந்தன். வினோநோகதாரலிங்கம், எம். சுமந்திரன், எஸ். சரவணபவன், வட மாகாணசபை அமைச்சர்களான ப.சத்தியலிங்கம், பா. டெனிஸ்வரன், வட மாகாண சபை உறுப்பினர்கள் இ. இந்திரராஜா, எம். தியாகராஜா, து. ரவிகரன், சி. சிவமோகன், அனந்தி சசிதரன், சிராய்வா, ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக இணைப்பாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி. பாஸ்கரா, மனித உரிமை செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதற்கான நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்கள் ஊர்வலமாக வவுனியா மாவட்ட செயலகம் வரை செல்வதற்கு தீர்மானித்து நகரசபை மண்டபத்திற்கு வெளியில் வந்ததும் பொலிஸார் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரனிடம் ஊர்வலமாக செல்ல அனுமதி இன்மையால் அவ்வாறு செல்ல வேண்டாம் எனக் கூறினர்.

எனினும் அவர் நாம் எவருக்கும் தொந்தரவின்றி வீதியோராமாக எமது காரியமொன்றிற்காக செல்லப்போகின்றோம் எனத் தொவித்து நடந்து சென்றனர்.

இவருடன் அரசியல் பிரமுகர்கள் காணாமற் போனோரின் உறவுகள்மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பலரும் சென்ற சமயம் நகரசபை வாயிலுக்கு அருகாமையில் கலவரத்தடுப்பு பொலிஸாரினால் தடைகள் போடப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதன்போது ஊர்வலமாக சென்றவர்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. கலவரத்தடுப்பு பொலிஸாரை தள்ளியவாறு சிலர் பொலிஸாரை கடந்து சென்றனர்.

எனினும் ஏனையோரை பொலிஸார் தடுத்து நிறுத்தியதுடன் ஒவ்வொருவரராக செல்லுமாறு பணித்தனர். இதன் பின்னர் பகுதி பகுதியாக வந்தவர்கள் மீண்டும் ஏ9 வீதிக்கு அருகாமையில் வைத்து ஒன்று திரண்டு பதாதைகளை ஏந்தியவாறு ஊர்வலமாக செல்ல முற்பட்டனர்.

இதனையடுத்து மீண்டும் பொலிஸார் தடை விதித்ததுடன் எக் காரணம் கொண்டும் செல்ல அனுமதிக்க மாட்டோம் எனத் தெரிவித்தனா. இதனால் மீண்டும் ஊர்வலமாக சென்றவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது.

இந் நிலையில் ஊர்வலமாகச் சென்றவர்கள் வீதியின் குறுக்காக அமர்ந்து கொண்டதும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன் போக்குவரத்தும் தடைப்பட்டது.

இவ்வாறு வீதியில் அமர்ந்தவர்கள் ஜனாதிபதிக்கு எதிராகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸாருக்கு எதிராக கோசங்களை எழுப்பினர்.

இவ்வாறான நிலையில் பொலிஸாருடன் பேச்சுக்களை நடத்திய செபமாலை அடிகளார் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கருத்து ஒருமைப்பாட்டுக்கு வந்து வீதியில் இருந்தவர்களிடம் இங்கு பல்வேறானவர்கள் நுழைந்துள்ளனர். பாரதூரமான நிகழ்வுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் வரலாம் என்பதனாலும் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் உட்பட யாரும் அற்ற நிலை காணப்படுவதனாலும் நாம் சமர்ப்பிக்கவுள்ள மகஜரை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் கையளிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தனர்.

எனினும் சிலர் எதிர்ப்பு தெரிவித்திருந்தாலும் முன்னின்று நிகழ்வினை நடத்துவதற்கு செயற்பட்ட பலரும் சம்மதம் தெரிவித்ததையடுத்து ஏ9 வீதியில் நீதிமன்ற வளாகத்திற்கு அண்மையில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் மகஜர் கையளிக்கப்பட்டதன் பின்னர் அனைவரும் கலைந்து சென்றனர். (70)

---

## குடிநீரின்றி...

விநியோகத்தை நிறுத்தியுள்ளது. எனினும் குடிநீர் விநியோகத்திற்குரிய நிதி வழங்கப்பட்டு விட்டதாக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவிக்கின்றது.

இவ்வாறு குடிநீரின்றித்தவிக்கும் மக்கள் நாளையதினம் பிரதேச செயலகம் சென்று, குடிநீர்நிறுத்தத்திற்கான காரணம் குறித்து கேள்வியெழுப்ப உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (37)

---

## குளத்தில்...

ரணி (வயது 16), விநாயகபுரத்தைச் சேர்ந்த கணேஸ் துஷாந்தினி (வயது 16) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.மூவர் குளித்துக்கொண்டிருந்த போது தாட்சாயினி நீரில் மூழ்கியதனை அவதானித்த ஏனைய இருவரும் அவரை காப்பாற்ற முயன்ற போது மூவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவர்களது சடலங்கள் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் நிலவும் கடுமையான வறட்சி காரணமாக வீடுகளிலுள்ள கிணற்று நீர் வற்றிய நில்லையில், இவர்கள் குளத்தில் குளிக்கச்சென்றவேளை இந்த பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது. (29, 40, 81)

---

## காணாமற்போனோரை..

யான நீதி கிடைப்பதை உறுதி செய்வதற்கு சர்வதேச சமூகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளை அனுமதிப்பதில்லை என்ற நிலைப்பாட்டை இலங்கை அதிகாரிகள் பின்பற்றி வருகின்றனர். எனவே இலங்கையில் காணமற்போனோரைத் தேடும் நடவடிக்கையும் நீதி வழங்குதற்கான வலுவான பொறிமுறையும் ஒரே நேரத்தில் அவசியமாகவுள்ளது. இலங்கையில் காணமற்போன ஆயிரக்கணக்கானவர்களை கண்டுபிடிப்பதற்கான வலுவான பொறிமுறை உடனடியாகத் தேவை. அதேபோன்று பலவந்தமாக காணமற்போகச் செய்யப்பட்டோருக்கு நீதியும் உண்மையும் மிகவும் அவசியம். - என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

## முடிவிற்கு...

யாளர்கள் நேற்று மாலை அறிவித்துள்ளனர்.

சம்பள உயர்வு உட்பட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணியாளர்கள் கடந்த ஐந்து நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இதனால் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைப் பெற்றவர்களும் நாளாந்த சிகிச்சைகளுக்கு வருவோரும் பாரிய சிரமங்களுக்கு உள்ளாகினர்.

இநிலையில் நோயாளி ஒருவரின் மனுவின் அடிப்படையில் பணிப்புறக்கணிப்புக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைக்கால தடையை விதித்தது. எனினும் தடையை மீறி நேற்றும் போராட்டம் நடைபெற்றது.

எனினும் நேற்று மாலை வெளியிடப்பட்ட தொழிற்சங்க அறிவித்தல் ஒன்றின்படி, தமது கோரிக்கைகள் சிலவற்றுக்கு உரிய பதில் வழங்கப்பட்டுள்ளமையால் இன்று காலையில் பணிப் புறக்கணிப்பை நிறுத்திக்கொள்வதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## பௌத்த...

கடும்போக்குவாதம் அண்மைக்காலமாக தலைதூக்கியுள்ளமை வருத்தமளிப்பதாக உள்ளது.

இலங்கையில் சிறுபான்மை மதச் சமூகத்தவர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

அனைத்து இன மக்களினதும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது அரசாங்கத்தினதும் மதத் தலைவர்களினதும் பொறுப்பாகும்.

மதத்தின் பெயரால் வன்முறைகளில் ஈடுபடுவது, மதங்களின் அடிப்படை கொள்கைகளுக்கு புறம்பானது என்பதுடன், மதக் குரோதங்களுக்கு எதிராக நாட்டின் தலைவர்கள் குரல் கொடுக்க வேண்டியது அவசியமானது என்பதுடன் மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

சில பௌத்த மதத்தலைவர்கள் சிறுபான்மை சமூகத்தின் மீது அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிடத் தூண்டுகின்றனர். இது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

இன மத அடிப்படையில் தண்டிக்கப்படும் நிலைமை மற்றும் யுத்தத்தில் சிக்கிப் பாதிக்கப்படும் நிலைமை குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது.

உலகின் அனைத்து பிரதான சமய நெறிகளும் அன்பையும் சமாதானத்தையுமே வலியுறுத்தி வருகின்றன.

கடும்போக்குவாதிகள் மட்டுமன்றி அவர்களுக்கு பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்குவோரும் கண்டிக்கப்பட வேண்டியவர்கள் மியன்மாரில் ரொஹினியா இனத்தவர்கள் மீது பாரியளவில் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையிலும் மியன்மாரிலும் பௌத்த மதத்தவர்கள் மேற்கொண்டு வரும் குற்றச் செயல்கள், பௌத்த மத ஸ்தாபகரான கௌதம புத்தரின் கொள்கைளுக்கு விரோதாமானது எனவும், அது புத்தருக்கு இழைக்கும் துரோகமாக நோக்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

---

## 13இற்கு...

கத்தை இலங்கை அரசாங்கத்தின் ஊடாக பெற்றுத் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் விடுத்த கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அப்படியான விரிவான அதிகாரங்களை எந்த வகையிலும் வழங்க முடியாது என இலங்கை அரசாங்கம் மீண்டும் இந்திய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட தரப்புகள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் தமிழர்களுக்கு பரந்துபட்ட அதிகார பரவலாக்கலை பெறுவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்கும் வகையில் விசேட தூதுவர் ஒருவரை நியமிக்குமாறு கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை இந்திய பிரதமர் மோடி நிராகரித்துள்ளார்.

எவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த கோரிக்கை, வடக்கு பிரதேசத்தை மாத்திரமல்ல, முழு இலங்கையையும் ஆட்சி செய்ய மேற்கொள்ளும் முயற்சி என அரசாங்கம் இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளது.

பரந்துபட்ட அதிகார பரவலாக்கம் மூலமாக வடக்கில் கனிய வளம், துறைமுகம், காடுகள், மீன்பிடி, உள்நாட்டு நீர் வழிகள், வெளிநாடு நிதியை பெறுதல் உள்ளிட்ட அதிகாரங்கள் பலவற்றை பெறுவதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நோக்கமாகும்.

இந்த அதிகாரங்களின் கீழ் புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து நிதியை பெற்றுக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட உள்ள முதலமைச்சர் நிதியத்திற்கு அனுமதி வழங்குமாறு வடக்கு மாகாண சபை விடுத்த கோரிக்கைக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

முதலமைச்சர் நிதியம் ஸ்தாபிக்கப்படும் முன்னர், அவுஸ்ரேலியாவில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் 5 மில்லியன் ரூபாவை வடக்கு மாகாண சபைக்கு அனுப்பியுள்ளதாக அரசாங்கத்திற்கு தெரியவந்துள்ளது எனவும் திவயின மேலும் தெரிவித்துள்ளது.

# கிளிநொச்சியில் கடும் வறட்சி

# உலருணவு வழங்க சிபாரிசு

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வருடம் வழமைக்கு மாறாக நிலவிவரும் கடுமையான வறட்சி காரண பாதிக்கப்பட்டுள்ள 15324 குடும்பங்களைச் சேர்ந்த 53914 பேருக்கு உலருணவு வழங்கவேண்டும் எனவும் இதற்காக வாரம் ஒன்றுக்கு 9652765 ரூபா தேவை என கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருடம் பருவமழை பொய்த்து போனதால் எந்தவொரு குளங்களும் முழுமையாக நிரம்பாது காணப்பட்டதனால் சிறுபோக பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்படவில்லை. வழமையாக பத்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளும் இரணைமடு குளத்தின் கீழ் மட்டும் இவ்வருடம் 800 ஏக்கர் பரப்பளவில் சிறுபோக நெற்செய்கை மேமற்கொள்ளப்பட்டது.

அத்தோடு மேட்டுநில விவசாய நடவடிக்கைகளும் வறட்சியினால் பெரும் பாதிப்புக்குள்ளாகிய நிலையில் விவசாய மாவட்டமான கிளிநொச்சியில் பெரும்பாலான குடும்பங்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் விபரங்கள் பிரதேச செயலக ரீதியாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஆய்வு செய்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி புள்ளிவிரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 6574 குடும்பங்களைச் சேர்ந்த 24516 பேரும், கண்டாவளை பிரதேச செயலகப்பிரிவில் 3071 குடும்பங்களைச் சேர்ந்த 9859 பேரும், பூநகரியில் 4672 குடும்பங்களைச் சேர்ந்த 16063 பேரும்,பச்சிலைப்பள்ளியில் 1007 குடும்பங்களைச் சேர்ந்த 3476 பேரும் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கான உலருணவு வழங்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வாரம் ஒன்றுக்கு 15324 குடும்பகளைச் சேர்ந்த 53914 பேருக்கு உலருணவு வழங்குவதற்கு 9652765 ரூபா தேவை எனவும் மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (29)

## பிரிவுபசார வைபவம்

மானிப்பாய் வடக்கு ஜே/137 கிராம உத்தியோகத்தராக கடமையாற்றி சுதுமலை வடக்கு ஜே/129 கிராமத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ள வி.கே. தனபாலாவிற்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு பிரிவுபசார வைபவம் இடம்பெறவுள்ளது.

மாணிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் த.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலி. தென்மேற்கு பிரதேசசபை தவிசாளர் ச. சிவகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதுடன் மானிப்பாய் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி றொகான் மகேஸ், வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா) கிராம உத்தியோகத்தர் எஸ். சிவபாலன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

## 2ஆவது போட்டியிலு வென்றது இந்தியா



இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நேற்றைய தினம் நொட்டிங்கமில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி இந்திய சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் விக்கெட்டுக்களை இழந்தது. அவ்வணியின் ஆரம்ப இணைப்பாட்டம் சிறப்பாக அமைந்தபோதிலும் பின்னர் வந்தவர்கள் சுழலில் இரையாக அவ்வணி 50 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பா குக் 44, ஹேலீஸ் 42, பட்லர் 42, ரெட்வெல் 30 ஆகியோர் அதிகபட் ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் அஸ்வின் பிரவீன் குமார், சமி, ரெய்ன ராயுடு, ஜடேஜா ஆகியே தலா ஒரு விக்கெட்டுக்ச கைப்பற்றினர்.

228 ஓட்டங்களை பெற்ற வெற்றி என்ற நிலைய கழமிறங்கிய இந்திய அணி ஓவர்களில் 4 விக்கெட்டுக்கல இழந்து வெற்றி இலக்க அடைந்தது. அவ்வணி சார்ப ரகானே 45, கோலி 40, ரெய் 42, ராயுடு ஆட்டமிழக்காது ஓட்டங்களைப் பெற்றனர்.

போட்டியின் ஆட்டநா னாக அஸ்வின் தெரிவானா

ஐந்து போட்டிகள் கெ ஒருநாள் தொடரில் இந்த அணி 2:0 என்ற நிலைய முன்னிலை வகிக்கின்றது. போட்டி மழை காரண கைவிடப்பட்டது குறிப்பிடத்த



நெடுந்தீவுக் கடற்கரைப் பகுதியில் இறந்த நிலையில் டொல்பின் ரக மீன் நேற்றுக் காலை கரையொதுங்கியதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இந்த டொல்பினை பெருமளவான பொதுமக்கள் பார்வையிட்டனர். இறந்த நிலையில் கரையொதுங்கிய இந்த டொல்பினை அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் குழிவெட்டிப் புதைத்தனர்

## சட்டவிரோத இத்தாலி பயணம் யாழ்ப்பாண சிறுவர்கள் சிக்கின

### கூட்டிச் சென்ற பெண் விளக்கமறியலில்

பிறிதொருவரின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்வதற்காக அழைத்துச் செல்லப்பட்ட போது ஜோர்தானிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட இரு சிறுவர்களையும் தலா ஒரு இலட்சம் ரூபா பிணை முறியில் பெற்றோர்களிடம் ஒப்படைக்குமாறு, நீர்கொழும்பு பிரதான நீதவான் பூர்ணிமா பரனகமகே, நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

இந்தச் சிறுவர்களுடன் திருப்பி அனுப்பப்பட்ட பெண் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 11 வயதுடைய சிறுவன் ஒருவனும் சிறுமி ஒருவருமே அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டவர்களாவர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சோதி ஜெசந்தா என்ற பெண்ணையே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்ட குறித்த முகவர் ஒருவர் மூலமாகவே சட்ட விரோதமான முறையில் வெளிநாடு செல்வதற்கு முயற்சி செய்யப்பட்டுள்ளது. இரு சிறுவர்களும் இரு பெற்றோர்களுடைய வர்களாவர்.

சந்தேகநபரான பெண் இரு சிறுவர்களுடனும் சட்டவிரோதமான முறையில் இத்தாலியை நோக்கி சென்றபோது ஜோர்தானிலிருந்து அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இவர்கள் மூவரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த போது புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பின்னர் நீர்கொழும்பு நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது குறித்த பெண் விளக்கமறியலில் வைக்( நீதவான் உத்தரவிட்டார். அத் இரு சிறுவர்களையும் பாதுகாப்பு இல்லங்களி குமாறும் நீதவான் உத்த

இந்நிலையில், இரு ளினதும் பெற்றோர்கள் பாக புலனாய்வுப் பி விசாரணை மேற்கெ நேற்று முன்தினம் இரு சிறு ளினதும் பெற்றோர்கள் நீதி றற்கு அழைத்து வரப்ப ருந்தனர்.

வழக்கு விசாரணையின் இரு சிறுவர்களையும் இலட்சம் ரூபாய் பிணை பெற்றோர்களிடம் ஒப்படை நீதவான் உத்தர விட்டார் வழக்கு எதிர்வரும செப மாதம 9ஆம் திகதி மீண் ரணைக்கு எடுத்துக் படவுள்ளது.

## வயோதிப பெண்ணைத் தாக்கி பணம், நகை கொள்ளை

(கரணவாய்)

வதிரி அல்வாய் பகுதியில் வீடு புகுந்த கொள்ளையர்கள் வயோதிபப் பெண்ணொருவரை தாக்கி பணம், தங்க நகைகளை கொள்ளையடித்துள்ளனர்.

நேற்று அதிகாலை தந்தையாருடன் இருந்த வயோதிபப் பெண்ணின் வீட்டிற்குள் புகுந்த இரு கொள்ளையர்கள் பெண்ணை அடித்து காயப்படுத்தி விட்டு 4 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் 10 ஆயிரம் ரூபா பணம், மற்றும் ஆவணங்கள் என்பனவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். சமபவம் தொடர்பில் மோப்ப நாயின் உதவியுடன் கொள்ளையர்கள் பயன்படுத்திய சைக்கிளை நெல்லியடிப் பொலிஸார் மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

வசந்தமணி செல்வராசா என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் தாக்குதலுக்கு இலக்கான பெண் மந்திகை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (18)

## மரண தண்டனைக் கைதிகளிடம் பெறப்படுகிறது வாக்குமூலம்

(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைச்சாலைகளிலுள்ள குற்றவாளிகளின் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைப்பது குறித்து ஆராய்ந்து சிபாரிசு முன்வைக்க நியமிக்கப்பட்ட குழு நூற்றுக்கும் அதிகமான மரண தண்டனைக் கைதிகளிடம் வாக்குமூலம் பெற்றுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்ரரத்ன பல்லேகம தெரிவித்தார்.

நாளைய தினம் மேலும் பல மரண தண்டனைக் கைதிகளிடம் வாக்குமூலம் பெறப்பட இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் மரண தண்டனை அமுல்படுத்தப்படாத நிலையில் மரண தண்டனை கைதிகளுக்கு வழங்கும் தண்டனையை குறைக்குமாறு கோரி கைதிகள் சிலர் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டனர். இவர்களுடைய கோரிக்கை குறித்து கவனம் செலுத்துவதாக உறுதியளிக்கப்பட்டதையடுத்து மரண தண்டனைக் கைதிகளின் போராட்டம் கைவிடப்பட்டது.

மரண தண்டனைக் கைதிகளின தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கும் வாய்ப்பு குறித்து ஆராய்ந்து பரிந்துரை முன்வைப்பதற்காக நீதி அமைச்சின் செயலாளர் சிறைச்சாலைகள் ஆணையாளர், முன்னாள் உச்சநீதிமன்ற நிதியரசர் எதிரிசூரிய அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழு இது தொடர்பில் பல்வேறு தரப்பினரை சந்தித்து தகவல் திரட்டி வருகிறது.

இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் 540 மரணதண்டனைக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## வவுனியா மாவட்டத்தி சிறுநீரக நோய்த் தாக்

### ஆயிரம் பேர் உயிரிழப்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் 29 கிராமங்களில் சிறுநீரக நோயால் பர்திக்கப்பட்ட பலர் உள்ளதாக அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

இரண்டாயிரத்திற்கும் அதிகமானவர்கள் வவுனியா மாவட்டத்தில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் இதில் அதிகமானவர்கள் விவசாயிகள் என ஜனாதிபதியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் பிரேமரட்ன சுமதிபால தெரிவித்துள்ளார்.

இந்த நோய் காரணமாக இதுவரை ஆயிரம் பே உயிரிழந்துள்ளனர். யாவின் தென்பகுதி இந்த நோய் பரவியுள்ள விக்கப்பட்டது. இந்த னால் தமிழ் விவசாயிகள் களவில் பாதிக்கப்படவி இதற்கு காரணம் தமிழ் வி யிகள் மத்தியில் இரசாயன பாவனை ஏற்கனவே செய்யப்பட்டுள்ளமையாகும் காரணம் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கை வடமத்திய மாகாணம் சிறு நோயினால் பாதிக்கப்பட் ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்